பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2034 தை 12 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 துல்ஹஜ் 03 (26.01.2004) திங்கட்கிழமை இதழ் :117



சாறிகள், பட்டு வேட்டிகள்,
கூறை சாறிகள் மற்றும்
ரெடிமேட் ஆடைகள், பல்வேறு
துணி வகைகள், பிளவுஸ்
துணி வகைகள்
யாவற்றுக்கும்
வருகை தாருங்கள்



சிவகணேசன் ரெக்ஸ்ரைல்ஸ்

41, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
(சி-2014)
T.P NO:
2222063

## தமிழீழ சட்டக் கல்லூரியில் நேற்று பட்டமளிப்பு விழா!

(கிளிநொச்சி)

தமிழீழ சட்டக் கல்லூரியில் பட்டம் பெற்ற நான்காவது தொகுதி மாணவர்களுக்கான பட்டமளிப்பு விழா நேற்று கிளிநொச்சியில் நடைபெற்றது.

தமிழீழ நீதிமன்ற வளாகத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொதுச் சுடரினை மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் மறறும் திருமதி பொன்தியாகமும் ஏற்றிவைத்தனர். தமிழீழ தேசியக் கொடியினை தமிழீழ அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஏற்றிவைத்தார்.

தொடர்ந்து வரவேற்புரையினை சட்டவாளர் கெனடி நிகழ்த்தினார். சட்டக் கல்லூரியின் நான்காவது அணிக்கான தகைமைச் சான்றிதழ்களை தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் வழங்கிக் கௌரவித்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)



## நெல்லியடியில் நேற்றும் விபத்து மூவர் படுகாயம்!

(நெல்லியடி)

நெல்லியடியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - கார் விபத்தில் எட்டு வயது சிறுமி உட்பட மூவர் படுகாயமடைந்தனர்.

நேற்று நண்பகல் 11.45 மணிக்கு நெல்லியடி பஸ் நிலையத்துக்கு முன்பாக இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவத்தில் கரணவாய் மண்டானைச் சேர்ந்த கதிர்காமம் வேலும்மயிலும் (வயது 35), வேலும்மயிலும் பவா (வயது35)

(12 ஆம் பக்கம் பார்க்க)

# அத்துருகிரிய தேடுதலுக்கு ஒத்துழைத்த சிரேஷ்ட ராணுவ அதிகாரிகள் மூவரை கட்டாய ஓய்வில் செல்லுமாறு பணிப்பு!

(கொழும்பு)

**அத்துருகிரியவிலிருந்த இராணுவத்தின் விசேட படைப்பிரிவுக்குச் சொந்தமான மறைவிடத்தில் தேடுதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய இராணுவ அதிகாரிகளை சேவையிலிருந்து நீக்குவதற்கு அரசாங்கம் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.**

அத்துருகிரிய மிலேனியம்சிற்றி இருந்த மறைவிடத்தில் பொலிஸார் தேடுதல் நடத்தி, இந்த மறைவிடம் தொடர்பான விடயத்தை பேணி வந்த இராணுவ அதிகாரிகள் சிலர் மீதும் நீதிமன்ற விசாரணைகள் நடத்தப்பட்டன.

இதேவேளை, இரகசிய மறைவிடத்தில் பொலிஸார் தேடுதல் நடத்தியமை தொடர்பாக விசாரிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசாரணைக்குழுவொன்றை நியமித்திருந்தார்.

இந்த விசாரணைக்குழு நடத்திய சிபாரிசின் அடிப்படையிலேயே, இந்த மறைவிடத் தேடுதல் நடத்தப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கருதப்படும் சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள் சிலர் மீது ஒழுங்குநடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

மூன்று முக்கிய இராணுவ அதிகாரிகளை பதவியைவிட்டு விலகிச் செல்லும்படி இராணுவத் தளபதி லெப். ஜெனரல் லயனல் பலகல்ல உத்தரவிட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு பதவியை விட்டு விலகிச் செல்லுமாறு இராணுவத் தளபதியால் கேட்டுக்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுடன் இரகசியப் பேச்சா? ஜனாதிபதி செயலகம் நிராகரிப்பு!

(கொழும்பு)

சமாதானப் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக, தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுக்கு - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவினால் எந்தவிதமான இரகசிய கடிதமோ அல்லது வேறு தகவல்களோ அனுப்பிவைக்கப்படவில்லை என்று ஜனாதிபதி செயலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சார்பில் விடுதலைப் புலிகளுக்கு இரகசியத் தகவல்கள் பரிமாறப்பட்டதாக அண்மையில் ஊடகங்களில் வெளியான தகவல்களை நிராகரித்து நேற்று வெளியிடப்பட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது -

விடுதலைப் புலிகளுடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செய்துகொண்டுள்ள இரகசிய உடன்படிக்கையைப் போன்று, எத்தகைய இரகசியத் தொடர்பையும் புலிகளுடன் வைத்துக் கொள்ளும் எண்ணம் ஜனாதிபதிக்குக் கிடையாது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி ஜெயவர்த்தன பதவி நீக்கப்பட்டார்!

## அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு

# அரசியல் நெருக்கடிக்குத் தீர்வு காணப்படாவிடின் நாட்டிற்கு பாரிய அச்சுறுத்தல் என்கிறார் பிரதமர்!

(அனுராதபுரம்)

அடுத்த மாதம் 17 ஆம் திகதிக்கு முன்னர் அரசியல் முறுகல்நிலை தீர்த்துவைக்கப்படா விட்டால், அது நாட்டிற்கு பாரிய அச்சுறுத்த லாக அமையுமென பிரதமர் ரணில் விக்கிரம சிங்க எச்சரித்துள்ளார்.

அனுராதபுரத்திற்கு விஜயம் செய்த பிரதமர், நேற்று அங்கு உரையாற்றும்போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது -

அடுத்த மாதம் 17 ஆம் திகதி அமெரிக்காவின் தலைநகர் வொஷிங்ரனில் இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் முக்கியஸ்தர்கள் கலந்துகொள்ளும் மாநாடு ஒன்று நடைபெறவுள்ளது. இதில் அமெரிக்க இராஜாங்க பிரதி செயலர் ரிச்சர்ட் ஆர்மிரேஜ் முக்கியஸ்தராகக் கலந்துகொள்ளவுள்ளார்.

இந்த மாநாட்டில் இலங்கையின் அரசியல் நிலவரம் குறித்து ஆராயப்படவிருப்பதால், விரும்பியோ விரும்பாமலோ எதிர்வரும் 17

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ரவி ஜெயவர்த்தன பதவி நீக்கப்பட்டார்!

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சின் விசேட ஆலோசகர் பதவியிலிருந்து முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்த்தனவின் மகன் ரவி ஜயவர்த்தனவை நிக்கப்பட்டார்.

பாதுகாப்பு அமைச்சின் விசேட ஆலோசகர் பதவியிலிருந்து நீக்கப்பட்டுவிட்டதான தகவலை, ரவி ஜயவர்த்தனவுக்கு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் தெரியப்படுத்தினார்.

ஒருவருடத்துக்கு முன்னர் ரவி ஜயவர்த்தனவை பாதுகாப்பு அமைச்சின் விசேட ஆலோசகராக பிரதமர் ரணில் விக்கிரம சிங்க நியமித்திருந்தார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கடற்படை வாகனம் மோதி நால்வர் ஸ்தலத்தில் பலி!

நீர்கொழும்பில் நேற்று ஹைறயேஸ் வான் ஒன்றை கடற்படை வாகனம் மோதியதில் வானில் பயணித்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பலியாகினர்.

நீர்கொழும்பு தலவலப் பிரதேசத்தில் நேற்றுப் பிற்பகல் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. வேகமாக வந்த இரு வாகனங்களும் மோதிக்கொண்டதில் ஹைறயேஸ் வானில்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தென்னிலங்கை அரசியல் இழுபறி நிலை புலிகளுக்கு ஏமாற்றம் அளித்துள்ளது!

### ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கையில் இடம்பெறும் அரசியல் இழுபறிநிலை சமாதானத்தை எதிர்பார்த்திருக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருப்பதாக ஜப்பானிய விசேட தூதுவர் யசுஷி அகாஷி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடத்திய செய்தியாளர் மாநாட்டிலேயே யசுஷி அகாஷி இந்தத் தகவலை வெளியிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

தற்போது நாட்டில் தோன்றியுள்ள அரசியல் முறுகல்நிலை சமாதான முயற்சிகளுக்கு பாதகமாகவே அமையும் என்பதால் ஜனாதிபதியும்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## குளத்தில் மூழ்கி மாணவிகள் இருவர் பலி!

(வவுனியா)

வவுனியா கூமாங்குளத்திற்கு குளிக்கச் சென்ற இரு மாணவிகள் நீரில் மூழ்கி உயிரிழந்தனர்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் வவுனியாவைச் சேர்ந்த எஸ். யோகேஸ்வரி (வயது11), பச்சைம்மா (வயது 10) ஆகிய இருவருமே உயிழந்தவர்களாவர்.

பாடசாலை விடுமுறை நாளான நேற்று முன்தினம் ஆறு மாணவர்கள் இணைந்து குளத்துக்கு குளிப்பதற்காக வீட்டில் அறிவிக்காது

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை.....

ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297

071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291

(சி-2009) email :- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.

எக்ஸ்போஎயார்

வான் வெளியில் உங்கள் நண்பன்...

EXPOAIR

your friend in the skies...

## வடமராட்சி கல்வி வலயத்தில்

# புலமைப் பரிசில் பரீட்சையில் 174 மாணவர்கள் சித்தி

(ஆழியவளை)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் 174 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். பாடசாலை ரீதியாக சித்தியடைந்தோர் விபரம் வருமாறு-

வடமராட்சி இந்து மகளிர் கல்லூரி, நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா 18 மாணவர்களும், புற்றளை மகா வித்தியாலயத்தில் 14 மாணவர்களும், தும்பளை சிவப்பிரகாசம் வித்தியாலயத்தில் 11 மாணவர்களும், கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலயம், துன்னாலை மேற்கு மெ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா பத்துமாணவர்களும்,

தம்பசிட்டி மெ.மி.த.க. பாடசாலை, உடுப்பிட்டி அ.மி.த.க பாடசாலை, கரவெட்டி விக்கினேஸ்வரா வித்தியாலயம், ஸ்ரீ சித்திவிநாயகர் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தலா ஏழு மாணவர்களும்,

வல்வை மகளிர் வித்தியாலயம், கற்கோவளம் மெ.மி.த.க. பாடசாலை, மேலைப்புலோலி சைவப் பிரகாச வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் தலா ஐந்து மாணவர்களும்,

கட்டைவேலி மெ.மி.த.க பாடசாலை, வதிரி திருஇருதயக் கல்லூரி, ஞானசாரியார் கல்லூரி, பொலிகண்டி சி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா நான்கு மாணவர்களும்,

இமையாணன் அ.த.க. பாடசாலை, கம்பர்மலை அ.த.க. பாடசாலை, திக்கம் சித்திவிநாயகர் வித்தியாலயம், வல்வை றோமன் கத்தோலிக்க பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா மூன்று மாணவர்களும்,

மணியகாரன் தோட்டம் அ.த.க. பாடசாலை, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி, வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரி, மருதங்கேணி இ.த.க. பாடசாலை, கரணவாய் வேதாரணிஸ்வரா வித்தியாலயம், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், வல்வெட்டி இ.த.க. பாடசாலை, புலோலி மெ.மி.த.க. பாடசாலை, ஆகிய பாடசாலைகளில் தலா இரண்டு மாணவர்களும்,

தாளையடி றோ.க.த.க. பாடசாலை, கரணவாய் தாமோதரா வித்தியாலயம், அல்வாய் சின்னத்தம்பி வித்தியாலயம், தட்டாதெரு மெ.மி.த.க. பாடசாலை, அல்வாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை, கொற்றாவத்தை மெ.மி.த.க. பாடசாலை ஆகிய பாடசாலைகளில் தலா ஒரு மாணவரும் சித்தியடைந்துள்ளனர்.(122)

## மருதங்கேணி கோட்ட பாடசாலைகளில் மிதிவெடி பாடத்திட்டம்

மருதங்கேணி கோட்டத்திலுள்ள பதினொரு பாடசாலைகளில் - தரம் ஒன்று முதல் தரம் 5 வரையான வகுப்புக்களில் மேலதிக பாடத் திட்டமாக மிதிவெடி கல்வி கற்பிக்கப்படவுள்ளது.

இதற்கான செயலமர்வு கோட்டக்கல்வி அதிகாரி பா. இரகுநாதன் தலைமையில் மருதங்கேணி இந்து தமிழ் கலவன் பாடசாலையில் 23, 24 ஆம் திகதிகளில் நடைபெற்றது. (17)

# கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயம்

(கேரதீவு)

கார் - மோட்டார் சைக்கிள் விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த இருவர் படுகாயமடைந்தனர்.

இந்தச் சம்பவம் நேற்றைய தினம் கேரதீவு வீதியில் மதியம் 2.45 மணியளவில் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது - மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த க.அருளானந்தம் (வயது 26) சு.சுதர்சன் (வயது 21) இருவரும் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது - மில் வேலை செய்துவிட்டு மதிய உணவுக்காக, இருவரும் மோட்டார் சைக்கிளில் சென்ற சமயம், கார் - மோட்டார் சைக்கிளில் மோதியது. விபத்து நடைபெற்ற இடத்துக்கு சென்ற சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டனர். கார்- மோட்டார் சைக்கிள் என்பன பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டன. (121)

# சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம்



அல்வாய் தெற்கு வதிரியைச் சேர்ந்த அமுதலிங்கம் சிவகுமார் அகில இலங்கை சமாதான நீதிவானாக பருத்தித்துறை மாவட்ட நீதிபதி க.அரியநாயகம் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

அல்வாய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் செயற்குழு உறுப்பினரான இவர், தேசிய எழுச்சிப் பேரவையின் ஊரகக்கிளைச் செயலாளரும், தேவரையாளி இந்துக் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.



முன்னாள் யாழ். மாநகரசபை உறுப்பினரான சந்தியாப்பிள்ளை மரியாம்பிள்ளை (குணம்) அகில இலங்கை சமாதான நீதிவானாக யாழ். பதில் நீதிபதி திருமதி சிறீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

சிறந்த விளையாட்டு வீரரும், நாடகக் கலைஞருமான இவர் யாழ். நகர் மேற்கு சமுர்த்தி வங்கிக் கட்டுப்பாட்டுச் சபைத் தலைவரும், J/85 கிராம சேவைப் பிரிவு புனர்வாழ்வு, புனரமைப்புக் குழுத் தலைவருமாவார்.

இவர் முன்னாள் யாழ். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளராகவும், நாவாந்துறை சென். மேரியஸ் சனசமூக நிலையத் தலைவராகவும், பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளராகவும் பணியாற்றியுள்ளார்.

நாவாந்துறை த.க.றோ.க. பாடசாலை பழைய மாணவரான இவர், சென். மேரிஸ் ஆலயச்சபை உறுப்பினராகவும் உள்ளார். (206)

## திணைக்களமாக மாற்றக்கோரி

# ரயில்வே ஊழியர்கள் இன்றுமுதல் வேலை நிறுத்தப் போராட்டம்

ரயில்வே அதிகாரசபையை திணைக்களமாக மாற்றக்கோரி, ஊழியர்கள் இன்று முதல் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வேலை நிறுத்தப் போராட்டத்தினை ஐக்கிய ரயில்வே கூட்டமைப்பு ஏற்பாடு செய்துள்ளது. இந்தக் கூட்டமைபபில் 30 தொழிற்சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன. ரயில்வே ஊழியர்களுக்கு- ரயில்வே அதிகார சபையினால் முன்மொழியப்பட்ட எந்த விடயமும் பூர்த்திசெய்யப்படவில்லை. எனவே, ரயில்வே அதிகார சபையை மீண்டும் ரயில்வே திணைககளமாக மாற்றும்படி கோரியே வேலை நிறுத்தப் போராடடத்தில் ஊழியர்கள் குதித்துள்ளனர்.

ரயில்வே கட்டுப்பாட்டாளர்கள், காவலாளிகள், ரயில்நிலைய அதிகாரிகள் இணைந்து செயற்படும் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் ரயில்வே திணைக்களமாக மாற்றப்படும்வரை தொடரும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (01)


திறைஞ்சனைஸ் சங்கானை

ஷாம், குட்டி ராதிகா நடித்த

இயற்கை

காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)

HULK

பெரியோர், சிறியோர் ஒன்றாகப் பார்க்கக்கூடியது

(சி-2004)

ராஜா யாழ்ப்பாணம்.

இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரே தின வெளியீடு

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா நடித்த

ஜெய்

காட்சிநேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

ஆசனங்களை முற்பதிவு செய்துகொள்ளலாம்.

(சி-2005)

# மக்கள் வங்கி

மக்கள் வங்கியின் சாவகச்சேரிக் கிளையிலும், யாழ். பல்கலைக்கழகக் கிளையிலும் (முன்னைய யாழ். நவீன சந்தைக் கிளையிலும்) 31.12.1984 இற்கு முன்பு அடகு வைத்து மீட்கப்படாத நகைகள் பின்வரும் திகதிகளில் யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளையில் வைத்து

## பகிரங்க ஏல விற்பனை செய்யப்படும்

| கிளைகளின் விவரம் | ஏலம் விடப்படும் திகதிகள் | ஏலம் செய்யப்படும் இடம் |
|---|---|---|
| சாவகச்சேரி | 14.02.2004 இல் இருந்து 16.02.2004 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |
| யாழ். பல்கலைக்கழகக் கிளை (முன்னைய யாழ். நவீன சந்தைக் கிளை) | 21.02.2004 இல் இருந்து 23.02.2004 வரை | யாழ். ஸ்ரான்லி வீதிக் கிளை |

மக்கள் மனமறிந்த வங்கி

மக்கள் வங்கி

பிரதேச முகாமையாளர்,
மக்கள் வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி-2171)

## நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்பட்டால்

# தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு 22 ஆசனங்கள் கிடைக்கும்!

## ஹற்றன் நஷனல் வங்கி ஆய்வு தெரிவிப்பு

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பொதுத் தேர்தல் ஒன்று நடாத்தப்படுமானால், அது தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்குச் சாதாகமாகவே அமையும் என ஹற்றன் நஷனல் வங்கியின் பங்குச் சந்தை தரகர்கள் மேற்கொண்ட ஆய்வு ஒன்று கூறுகிறது.

ஹசித பிரேமரத்ன என்பவரால் செய்யப்பட்ட இந்த ஆய்வில், 2001 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பெற்ற ஆசனங்களைவிட, புதிய தேர்தலொன்றில் குறைந்தது ஐந்து ஆசனங்களையேனும் அதிகமாகப் பெறும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆசனங்களின் எண்ணிக்கை 20 ஆக உயரும எனவும், போனஸ் ஆசனங்கள் இரண்டையும் சேர்த்தால் தமிழ்க்கூட்டமைப்பின் ஆசனங்களின் எண்ணிக்கை 22 ஆக உயரும் என்றும், அந்த ஆய்வில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதிதாக தோற்றுவிக்கப்பட்டிருக்கும் சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பு புதிய தேர்தலில் குறிப்பிடத்தக்களவு தாக்கமெதனையும் செலுத்தாது என்றும் குறிப்பிடும் இந்த ஆய்வு, புதிய தேர்தல் ஒன்று இடம்பெற்றால் கிடைக்கக்கூடிய இரண்டு சாத்தியமான பெறுபேறுகளையும் அட்டவணைப்படுத்தியுள்ளது.

2001ஆம் ஆண்டுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி பெற்ற ஆசனங்களைவிட குறைந்தளவு ஆசனங்களையே அது பெறும் எனவும், அதேபோல், சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. கூட்டமைப்பு ஓரளவு கூடுதல் ஆசனங்களைப் பெறுமெனவும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2001ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசிய முன்னணி 109 ஆசனங்களைப் பெற்றிருந்தது. புதிய தேர்தலில் இது ஒன்றில் 103 ஆசனங்களாக, அல்லது 96 ஆசனங்களாக அமையலாம் என்று இந்த ஆய்வு எதிர்வு கூறுகிறது.

அதேபோல், 2001ஆம் ஆண்டுத் தேர்தலில் 79 ஆசனங்களைப் பெற்றிருந்த பொதுஜன ஐக்கிய முன்னணியும், 16 ஆசனங்களைப் பெற்றிருந்த ஜே.வி.பி.யும், புதிய தேர்தலில் கூட்டாக 97 ஆசனங்களை அல்லது 104 ஆசனங்களைப் பெறலாம் என்றும் இந்த ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எத்தகைய ஒரு சந்தர்ப்பத்திலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 22 ஆசனங்களைப் பெறும் என்று குறிப்பிடும் இந்த ஆய்வு, முஸ்லிம் காங்கிரஸ் கட்சி புதிய தேர்தலில் மூன்று ஆசனங்களை மட்டுமே பெறும் என்றும் எதிர்வு கூறியிருக்கிறது.

இவை தவிர ஏனைய கட்சிகள் ஆசனங்கள் எதனையும் பெறும் வாய்ப்பு கிடையாது எனவும் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எப்படித்தான் தேர்தல் முடிவுகள் அமைந்தாலும் 2003ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி பெற்ற ஆகக் குறைந்தபட்ச நாடாளுமன்றப் பெரும்பான்மையைக் கூட, இம்முறை ஐக்கிய தேசிய முன்னணியோ, அல்லது சிறிலங்கா சுதந்திரக் கட்சி - ஜே.வி.பி.கூட்டு முன்னணியோ பெறமுடியாது என்றே இந்த ஆய்வு தெரிவிக்கிறது.

எனவே, தேர்தலின் பின்னர் எந்தக் கட்சி ஆட்சியமைப்பதாக இருந்தாலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு அதற்குத் தேவைப்படும் நிலையே ஏற்படும் என்பதையே இந்த ஆய்வு எதிர்வு கூறியுள்ளது.



நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் - பிரித்தானியத் தூதரகத்தின் அரசியல் விவகார இரண்டாவது செயலாளர் கதறின் கீவ் ஐச் சந்தித்தபோது

## ஜே.வி.பி தலைவர் சோமவன்ச கைதுசெய்யப்படவேண்டும்!

### ரவி கருணாநாயக்க கோரிக்கை

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்சவைக் கைதுசெய்யவேண்டுமென வர்த்தக பாவனையாளர் அலுவல்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவரைக் கைதுசெய்வதற்கான தகுந்த காரணம் உண்டு. இன்று சிறையில் இருக்கவேண்டியவர்கள் வெளியே இருக்கின்றனர். வெளியே இருக்கவேண்டியவர்கள் சிறையில் இருக்கின்றனர். இதுதான் நாட்டின் அடிப்படைப் பிரச்சினைக்குக் காரணம். வெளிநாட்டில் சுகமாக வாழ்ந்துவிட்டு, இன்று சோமவன்ச மாக்சிசக் கோட்பாட்டைப பரப்ப வந்துள்ளார். இதனால் என்ன இலாபம்?

இன்று ஜனாதிபதியும், ஐக்கிய முன்னணியும் ஜே.வி.பி என்ற இயந்திரத்தின் ஒலி பெருக்கிகளாக மாறியுள்ளனர். விமல் வீரவன்ச, சோமவன்ச, ஆகியோர் கூற்றுக்கு இணங்க சிலர் ஆடுகின்றனர்.

சேருவில, திருகோணமலை, வன்னி பிரதேசத்தில் புலிகளின் பல முகாம்கள் உள்ளன. மணிராசன்குள முகாமைச் சுட்டிக்காட்டி இவர்கள் ஏன் குளறினார்கள்? சோமவன்சவை ஏன் கைதுசெய்யமுடியாது என்று ஜனாதிபதியிடம் கேள்வி எழுப்பியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

## புதிய கூட்டணி; சந்தேகம் தருகிறது

### கஜந்த கருணாதிலக

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள ஐக்கிய மகள் விடுதலை முன்னணி அளித்துள்ள பதில்களைவிட - பதிலளிக்காத கேள்விகள் அதிகமாக இருப்பதாக ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஐ.தே.கவின் பேச்சாளர் கஜந்த கருணாதிலக மேலும் தெரிவித்தாவது - புதிய கூட்டு முன்னணி மூன்று மொழிகளில் வெளியிட்ட புரிந்துணர்வு உடன்படிக்கை உண்மையானதுதானா அல்லது நான்காவது ஆவணத்தில் முன்கூட்டியே கையொப்பமிடப்பட்டதா என்று கேள்வி எழுப்பினார்.

இவர்கள் நடத்தப்போகும் நாடகத்தின் குழப்பம் மிகுந்த கட்டத்தின் ஆரம்ப நிலையே இது.

அத்துடன் இன்னொரு கேள்விக்கும் விடை காண வேண்டும். சிறிலங்கா சுதந்திரக்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருடனும் கலந்தாலோசிக்கப்பட்டு கூட்டு உடன்படிக்கையில் கைச்சாத்திடப்பட்டதா அல்லது சிலர் தலைமைத்துவங்களால் வற்புறுத்தப்பட்டார்களா? என்பதே அது.

ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி உடன்படிக்கை- ஏமாற்றங்களையும், பொய்களையுமே கொண்டிருக்கின்றன. இந்தநாட்டு மக்களைப் பயமுறுத்துவதறகாகவே இந்தக் கூட்டணி உருவாக்கப்பட்டிருக்கிறது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மதக்கலவரங்களைத் தடுப்பதுபற்றி மன்னாரில் ஆராய்வு!

மதக்கலவரங்களைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக - மன்னார் பிரதேசத்தில் சர்வமதக் குழுக்கள் ஒன்றுகூடி ஆராய்ந்தன.

நேற்றுமுன்தினம் மன்னார் அரசாங்க அதிபர் வே.விஸ்வலிங்கம் தலைமையில் இந்தக் கூட்டம் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் மும்மதத் தலைவர்கள், அரசியல் பிரமுகர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர். இனப்பிரச்சிணைக்குத் தீர்வு காணப்படாத நிலையில், மதப்பிரச்சினைகள் நாட்டில் தலைதூக்கியுள்ளது. இவ்வறான மதப்பிரச்சினைகளை எவ்வாறு மன்னார் மாவட்டத்தில் கட்டுப்படுத்தமுடியும், நாட்டில் மத ஒற்றுமையை வலுப்படுத்த மக்கள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பன போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து இந்தக் கூட்டத்தில் சர்வமதக்குழுவினர் ஆராய்ந்தனர்.

## எமது வளங்களைப் பயன்படுத்தி கல்வியை வளர்க்கவேண்டும்!

### கல்விப் பொறுப்பாளர் இளங்குமரன்

கடந்த போர்க்காலச் சூழலில் அழிக்கப்பட்ட பிரதேசவளம் ஒரு புறம், பொருளாதாரத் தடை ஒருபுறமெனப் பல்வேறு இடர்களுக்கு மத்தியில் எமது தாயகத்தில் உள்ள வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி, தமிழ் மாணவர்களின் கல்வியை வளர்தெடுக்க வேண்டும் என, தமிழீழ கல்விக் கழகப் பொறுப்பாளர் வே.இளங்குமரன் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற கல்வி மேம்பாட்டுப் பேரவையின் பொதுக் கூட்டத்தில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் - கல்வி மேம்பாடு என்ற வகையில் ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் பொறுப்புகளில் நின்றுவிடாது, ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்து கல்வித் துறையில் அனைத்துப் பிரிவினரும் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டும் எனவும், கல்வித் துறையின் அனைத்துப் பிரிவினரும் உள்ளடங்கலாக தமிழீழ கல்விப் பேரவை அமைக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

ஏற்கனவே தடையாகவுள்ள வளப் பற்றாக்குறை ஒருபுறம் கடந்த போர்காலச் சூழலில் அழிக்கப்பட்ட பௌதீக வளம் ஒருபுறம் பல்வேறு தடைகளுக்கு மத்தியில் எங்களிடம் தற்போதுள்ள வளத்தினை உச்சமாகப் பயன்படுத்தி தமிழீழ மாணவர்களின் கல்வியை வளம்படுத்த வேண்டுமென்று அவர் மேலும் தெரிவித்தார்.

## கல்குடா கல்வி வலயத்தில் 300 ஆசிரியர்களுக்கு வெற்றிடம்

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்தில் 300 ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவுவதாக வலயக் கல்விப் பணிப்பாளர் கணபதிப்பிள்ளை தெரிவித்தார். விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம ஆகிய பாடங்களுக்கே அதிகளவில வெற்றிடம் நிலவுவதாக அவர் குறிப்பிட்டார்.

யுத்தம் காரணமாக மிகவும் பாதிக்கப்பட்ட பல பகுதிகளை உள்ளடக்கிய இந்தக் கல்வி வலயத்தில் 94 பாடசாலைகள் உள்ளன. வாழைச்சேனை, ஓட்டமாவடி, வாகரை பிரதேச செயலக பிரிவுகளிலேயே இந்தப் பாடசாலைகள் செயற்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

## புதிய கூட்டணி தொடர்பாக

# சிங்கள மக்கள் எடுக்கும் முடிவே நாட்டின் நிலையைத் தீர்மானிக்கும்

## மனோ கணேசன் தெரிவிப்பு

ஸ்ரீலங்கா சுதந்திர கட்சிக்கும், ஜே.வி.பி. க்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்தைப் பார்த்து தமிழ் மக்கள் பெரியளவில் அலடடிக்கொள்ளத் தேவையில்லை. அச்சப்படவும் தேவையில்லை. பதற்றப்படவும் தேவையில்லை.

இது கொழும்பிலிருந்து செயற்படும் சிங்கள அரசியல் தலைமைகளின் வழமையான அரசியல் சித்துவிளையாட்டுகள் என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ளவேண்டும் என மேல் மாகாண மக்கள் முன்னணி தலைவரும், கொழும்பு மாவட்ட எம்.பி.யுமான மனோ கணேசன் தெரிவித்தார். அவர் இதுபற்றி மேலும் கூறியதாவது:-

கடந்த அரசு காலத்தில் பொதுஜன ஐக்கிய முன்னணி பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த ஒரு அரசியல் தீர்வுப் பொதியை வெவ்வேறு காரணங்களுக்காக தமிழ் தலைமைகளும், ஐக்கிய தேசிய கட்சியும் எதிர்த்தன. அச்சந்தர்ப்பத்தில் ஐக்கிய தேசிய கட்சியுடன் இணைந்து ஜே.வி.பி. அன்றைய பொதுஜன ஐக்கிய முன்னணியின் தீர்வுத் திட்டத்தை தீவிரமாக எதிர்த்தது. அது மாத்திரமல்லாமல் சர்வதேச மத்தியஸ்தத்தையும், இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அரசியல் பேச்சுவார்த்தையையும், அதிகாரப் பிரிவினையையும், தமிழர்களின் ஏகப் பிரதிநிதிகளாக விடுதலைப் புலிகளையும் ஜே.வி.பி. நிராகரித்திருந்தது.

ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி அல்லது ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியைப் பொறுத்தவரையில் அது தமிழர்களுக்கெதிரான பல்வேறு பேரினவாத நடவடிக்கைகளை காலத்திற்குக் காலம் எடுத்திருந்தாலும் கூட இக்கட்சி எப்போதும் அதிகாரப் பிரிவினைக் கொள்கையை ஏற்றுக்கொண்டே இருந்திருக்கின்றது. இது அன்றைய எஸ். டபிள்யூ. ஆர்.டி.பண்டாரநாயக்க காலத்திலிருந்து இன்றைய சந்திரிகா பண்டாரநாயக்க காலம் வரை தொடர்கின்றது.

அதே வேளையிலே இந்நாட்டை கொழும்பிலிருந்து ஆண்ட கட்சி என்ற முறையிலும் இனிமேலும் ஒரு காலத்தில் ஆளக்கூடிய ஒரு கட்சி என்ற முறையிலும் அரசியல் யதார்த்தங்களை அறிந்திருக்கின்றது. ஜே.வி.பி. போல் அல்லாமல் சர்வதேச மற்றும் தேசிய நிர்ப்பந்தங்களுக்கு பதில் சொல்லியே ஆகவேண்டிய கட்டாயத்தில் இருககிறது. எனவே உருவாகிவிட்ட இந்த கூட்டமைப்பில் வழிகாட்டி கட்சியாக எந்தக்கட்சி முதன்மை ஸ்தானத்தை வகிக்கப் போகின்றது என்பதிலேயே அனைத்தும் தங்கியிருக்கின்றன.



அதிகாரப் பிரிவினையையும், விடுதலைப் புலிகளுடனான பேச்சு வார்த்தை யையும் நோக்கி ஜே.வி.பி.யை சந்திரிகா அழைத்துச் செல்லப் போகின்றாரா? அல்லது மீண்டும் இருண்டகால பேரினவாத யுத்தத்தை நோக்கி சோமவன்ச அமரசிங்க ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியை அழைத்துச் செல்லப் போகின்றாரா? என்பதையே தமிழர்களுடன் சேர்ந்து முழு உலகமும் நிதானமாக அவதானிக்கப் போகின்றது.

சிங்கள தலைமைகளின் இந்த போக்கு கட்டுப்படுத்தப்படாமல் பழைய வரலாறு திரும்புமானால் இந்நாடு தமிழீழம், ஸ்ரீலங்கா என்ற இருவேறு நாடுகளாக பிரிந்துவிடும் என்பதைத் தவிர வேறு எதுவும் நடக்க முடியாது. எனவே இந்த புதிய கூட்டமைப்பின் மூலமாக நாடடில் பிரிவினையை உருவாக்கிவிடவும் அல்லது தமிழர்களுக்கு பூரண சுயாட்சி வழங்கி பிரிவினையை தடுத்திடவும் சிங்கள மக்களின் முடிவை எதிர்பார்த்து நிற்பதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# உதிரிகளைத் தவிர்த்தால் உறுதியாக வெல்லலாம்!

## இந்திய அணிக்கு ரவிசாஸ்திரி ஆலோசனை



சிட்னி தோல்வி பற்றி இந்தியா கவலைப்படத் தேவையில்லை. காரணம் அந்தப் போட்டியில் இந்திய அணியின் உறுதியான ஆட்டம் நிச்சயம் அவுஸ்ரேலியர்களின் தன்னம்பிக்கையைக் குறைத்திருக்கும்.

இவ்வாறு முத்தரப்புக் கிரிக்கெட்டில் இந்தியா - அவுஸ்ரேலியா அணிகளுக்கிடையிலான சிட்னி போட்டிபற்றி, முன்னாள் இந்திய அணி வீரர் ரவி சாஸ்திரி தனது கருத்துக்களைத் தெரிவித்தார்.

உலகக் கோப்பைத் தொடருக்கு அடுத்ததாக அவுஸ்ரேலியா அணிக்கு எந்த விதத்திலும் தாங்கள் சளைத்தவர்கள் இல்லை என்பதை, இந்தியா பலமுறை நிரூபித்துள்ளது. இந்தத் தொடரையே எடுத்துக்கொண்டால், முதலில் நடந்த டெஸ்ட் போட்டிகள் ஆகட்டும் இப்போது நடந்துவரும் ஒருநாள் தொடராகட்டும் அவுஸ்ரேலிய அணி இந்தியாவை வெல்ல போராடவேண்டியிருக்கிறது.

முத்தரப்புத் தொடரை பொறுத்த வரை கங்கூலிக்கு ஒரே ஒரு விடயம் மட்டும் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் கொஞ்சம் கட்டுக்கோப்பாக பந்துவீசுமாறு தனது பந்துவீச்சாளர்களை கங்கூலி பணிக்கவேண்டும். சிட்னி போட்டியையே எடுத்துக்கொள் ளுங்கள் இந்தியப் பந்துவீச்சாளர்கள் கொடுத்த உதிரிகளின் எண்ணிக்கை மிகமிக அதிகம் உதிரிகளைக் குறைத்தால் போதும் உறுதியாக வெல்லமுடியும்.

# பங்களாதேஷ் அணிக்கு புதிய கப்டன் நியமனம்



பங்களாதேஷ் கிரிக்கெட் அணி - பெப்ரவரி 10 ஆம் திகதிமுதல், சிம்பாப்வேயில் சுற்றுப்பயணம் செய்து டெஸ்ட் மற்றும் ஒரு நாள் போட்டியில் விளையாடவுள்ளது. இந்தத் தொடருக்கான பங்களாதேஷ் அணிக்குப் புதிய கப்டன் நியமிக்கப்பட்டுள்ளார்.

காலித் முகமத்துக்குப் பதிலாக ஹபிபுல் பஸர் கப்டனாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார். காலித் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார். ஹபிபுல்பஸர் டெஸ்டில் இரண்டு சதம் அடித்துள்ளார். அவர் அணிக்குப் பொருத்தமான கப்டன் என்று பங்களாதேஷ் தேர்வுக்குழு தெரிவித்தது.

சிம்பாப்வே தொடருக்கான பங்களாதேஷ் அணி வருமாறு -

ஹபிபுல்பஸர் (கப்டன்), தபேஷ்பாசியா, காலித் மசூத், சர்கார், சாரியர் ஹுசேன், முகமது அஸ்ரப், தாரிக், அசீஸ், மஞ்சுரல் இஸ்லாம், அன்வர் ஹுசேன், அலோக் கபாலி, ரகுமான், முகமது ரபீக், கபில், ரானா, அல்சகாரியர், சாஜின்.

### மென்பந்து சுற்றுப்போட்டி

இணுவில் இந்து விளையாட்டுக் கழகம் தமிழீழ விளையாட்டுத் துறையினரின் அனுசரணையோடு மென்பந்துச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகிறது. நேற்று முன்தினம் ஆரம்பமான இந்தச் சுற்றுப் போட்டியில் யாழ். மாவட்டத்திலுள்ள பல விளையாட்டுக் கழகங்கள் பங்கு பற்றி வருகின்றன.

ஐந்து ஓவர்களைக் கொண்ட ஆறுபேர் பங்கு கொள்ளும் இந்தச் சுற்றுப் போட்டிகள் யாவும் இணுவில் மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்திலே நடைபெற்றுவருகிறது.(ச)

### மெய்வல்லுநர் போட்டி

தெல்லிப்பளை மகாஜனாக் கல லூரியின் வருடாந்த இல்ல' மெய்வல்லுநர் போட்டி எதிர்வரும் 31ஆம் திகதி சனிக்கிழமை கல்லூரி மைதானத்தில் பி.ப 2 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட விளையாட்டுத்துறை அதிகாரி றோகான் இராஜசிங்கம் கலந்து கொள்ளவுள்ளார். (72)

# சிட்னி போட்டியில் கங்கூலிக்கு அபராதம்

(சிட்னி)



அவுஸ்ரேலியாவுக்கு எதிரான சிட்னி கிரிக்கெட் போட்டியில், இந்திய அணி கப்டன் கங்கூலிக்கு 80 சதவீத சம்பளத் தொகை அபராதமாக விதிக்கப்பட்டது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் விதிகளின்படி - குறிப்பிட்ட நேரத்தில், நிர்ணயிக்கப்பட்ட ஓவர்களை வீசாமல் குறைவாக வீசினால் - வீரர்களுக்கு சம்பளத் தொகையில் 5 சதவீதமும், அணிததலைவருக்கான சம்பளத் தொகையில் 10 சதவீதமும் அபராதமாக விதிக்கப்படும்.

சிட்னியில் கடந்த 22 ஆம் திகதி நடைபெற்ற அவுஸ்ரேலியாவுக்கு எதிரான போட்டியின் போது, இந்தியப் பந்து வீச்சாளர்கள் 3 ஓவர்கள் குறைவாக வீசினர். இதனால், போட்டியில் பங்கேற்ற வீரர்களுக்கு 15 சதவீதமும், அணித்தலைவர் கங்கூலிக்கு 30 சதவீதமும் போட்டிக்கான சம்பளத் தொகையில் அபராதமாக விதிக்கப்பட்டது.

இதைத்தவிர, இந்தப் போட்டியில் தேவையில்லாமல் முறையீடு, விக்கெட் வீழ்ச்சி ஆரவாரத்திற்காக எடுத்துக்கொண்ட நேரங்களுக்காகவும் 50 சதவீதம் கூடுதல் அபராதமும் விதிக்கப்பட்டது. இத் தகவலை இந்தத் தொடருக்கான நடுவர் கிளைவ் லொயிட் நேற்றுமுன்தினம் அறிவித்தார்.

# விளையாட்டு

# எமது அணிக்கு இப்போது லக்ஷ்மன் தான் பெரிய மிரட்டல்!

## மைக்கல் பெவன் தெரிவிப்பு



முத்தரப்புத் கிரிக்கெட்டைக் காணவரும் அவுஸ்ரேலிய ரசிகர்கள் எண்ணிக்கை முன்னெப்போதையும்விட தற்போது வெகுவாக அதிகரித்திருக்கிறது.

மிகச் சிறந்த ஆட்டத்தை இங்கு பார்க்கமுடியும் என்று தெரிந்திருப்பதால்தான், அவர்கள் நம்பிக்கையுடன் போட்டிகளைக் காணவருகிறார்கள்.

இதற்காக, இந்திய அணிக்கு கண்டிப்பாக நன்றி தெரிவிக்க வேண்டும். இவ்வாறு அவுஸ்ரேலிய அணித் தலைவர் மைக்கல் பெவன் தெரிவித்தார்.

இந்தத் தொடரில் எங்கள் அணிக்கு மிகப்பெரிய மிரட்டல் என்றால் சந்தேகமே இல்லாமல் அது வி.வி.எஸ். லக்ஷ்மன்தான். அவருக்குப் பந்துவீசுவது, எங்கள் பந்து வீச்சாளர்களுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கிறது.

1998 - 1999 களில் எங்கள் அணிக்கு எதிராக, அசைக்க முடியாத துடுப்பாட்ட வீரராக இருந்தார் சச்சின் டெண்டுல்கர், டெஸ்ட் போட்டியோ ஒரு நாள் போட்டியோ, சதம் அடித்த பிறகுதான் வெளியேறுவார். தனிநபராக, எங்களுக்கு பல தோல்விகளைத் தந்திருக்கிறார்.

1998 இல் சச்சின், இப்போது லக்ஷ்மன், கொஞ்ச நாள் முன்புவரை, இந்திய அணி சச்சினை மட்டுமே அதிகம் சார்ந்திருந்தது. இப்போது சச்சின் இல்லாமலே அவர்களால் வெல்ல முடிகிறது.

சிட்னி போட்டியையே எடுத்துக் கொண்டால் கடைசி ஓவரில் சிக்ஸர் அடித்து பிரெட் லீ எங்களுக்கு வெற்றி தேடித் தரும்வரை ஆட்டம் இந்தியாவின் கைகளில் தானே இருந்தது.

அந்தப் போட்டியில் சச்சின் இல்லை. ஆனால், லக்ஷ்மன், யுவராஜ் இணைந்து மிகப்பெரிய ஸ்கோருக்கு கொண்டுசென்றுவிட்டார்கள்.

இந்திய அணி அதன் மிகச்சிறந்த கால கட்டத்தில் இப்போது விளையாடிக்கொண்டிருக்கிறது. முன்புபோல அவர்கள் அவ்வளவு சுலபமாக ஆட்டத்தை விட்டுக் கொடுப்பதில்லை.

அதேசமயம், எங்கள் தரப்பில் இன்னும் பலவீனங்கள் இருக்கத்தான் செய்கிறது. பந்துவீச்சு, களத்தடுப்பு ஆகிய துறைகளில் நிறைய திருத்தங்கள் செய்து கொள்ளவேண்டும். குறைகள் இருந்தாலும் கூட நாங்கள் ஜெயித்துக் கொண்டிருப்பதால் தெரியவில்லை

அடுத்த சில நாட்களில் இறுதிப்போட்டி வந்துவிடும் அதற்குள் குறைகளைத் திருத்திக்கொள்ள வேண்டியது முக்கியம்.

தவறுகளே இல்லாமல் மிகச் சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த ஆரம்பித்தால் எங்களை சமாளிப்பது இந்தியாவுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும்.

# சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ரொபின்சிங் ஓய்வு பெற்றார்



பிரபல இந்தியக் கிரிக்கெட் வீரர் ரொன்பின்சிங் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதாக அறிவித்தார்.

இது குறித்து நேற்றுமுன்தினம் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் - சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுவதற்கு முடிவெடுத்துள்ளேன். ஓய்வுபற்றி இந்திய கிரிக்கெட் சபைக்கு ஏற்கனவே தகவல் தெரிவித்திருந்தேன்.

சாதாரணமாக ஒவ்வொரு வீரர்களும் 19 வயது முதல் 30 வயது வரையே துணிவுடனும், திறமையுடனும், உற்சாகத்துடனும் விளையாடுவார்கள். இந்த வயதினை தாண்டிய பிறகே நான் அணியில் தேர்ந்தெடுக்கப்பட்டேன். ஏறக்குறைய 131 ற்கும் மேற்பட்ட ஒருநாள் போட்டிகள் மற்றும் டெஸ்ட் போட்டிகளில் விளையாடினேன்.

1999 இல் பங்களாதேஷில் வைத்து பாகிஸ்தானுக்கு எதிரான போட்டியில் 314 ஓட்டங்கள் எடுத்து அணியை வெற்றிப் பாதைக்கு இட்டச் சென்றது மறக்கமுடியாத நிகழ்ச்சியாகும் என அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடாளுமன்றத் தேர்தலில் நான் போட்டியிட மாட்டேன்!

## ப. சிதம்பரம் தெரிவிப்பு

நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் எண்ணம் இல்லை என்று காங்கிரஸ் ஜனநாயகப் பேரவை பொதுச் செயலாளர் ப.சிதம்பரம் கூறினார்.

சேலத்தில் செய்தியாளரிடம் அவர் பேசுகையில், கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் - நாங்கள் இடம்பெற்றிருந்தோம். சட்டசபைத் தொகுதி எங்களுக்கு ஒதுக்கப்பட்டன. இரண்டிலும் நாங்கள் வெற்றிபெற்றோம்.

இந்த முறை இதுவரை எங்களை தி.மு.க. தலைவர் கருணாநிதி பேச்சுக்கு அழைக்கவில்லை. இருப்பினும் அவரை சந்திக்க நாங்கள் ஆர்வமாகவே இருக்கின்றோம்.

இருப்பினும், மக்களவை தேர்தலில் போட்டியிட நாங்கள் ஆர்வம் காட்டவில்லை. 2006 ஆம் ஆண்டு நடக்கப்போகும் சட்டசபைத் தேர்தலில்தான் நாங்கள் கவனம் செலுத்தவுள்ளோம்.

சோனியா காந்தியை மீண்டும் சந்திப்பதை நிதானப்படுத்தி வைத்துள்ளேன். அவரை சந்தித்த பின்னர், மக்களவைத் தேர்தலில் போட்டியிடுவதா? வேண்டாமா? என்பதை முடிவுசெய்வேன். காங்கிரஸ் கட்சியுடன் நாங்கள் இணைவது என்ற பேச்சு இப்போது எழவில்லை.

தி.மு.க. கூட்டணியிலிருந்து சிதம்பரத்திற்கு தனியாக இடம் தருவதாக முதலில் எதிர்ப்பார்க்கப்பட்டது. ஆனால், சிதம்பரத்திற்கு என தனியாக இடம் தரமுடியாது என்று தி.மு.க தரப்பில் கூறிவிட்டதாக தெரிகின்றது. அதேசமயம், காங்கிரஸுக்கு ஒதுக்கப்படும் இடங்களிலிருந்து ஒன்றை அவருக்குக் கொடுக்குமாறு தி.மு.க. தலைமை காங்கிரஸ் கட்சியிடம் தெரிவித்ததாகவும் அதன் காரணமாகவே தேர்தலில் போட்டியிட ஆர்வம் இல்லை என்று ப.சிதமபரம் கூறுவதாகவும் தெரிகிறது.

இதற்கிடையே, சிவகங்கை தொகுதியில் ப.சிதம்பரம் போட்டியிட்டால் அவருக்கு எதிராக வலுவான வேட்பாளரை அ.தி.மு.க. நிறுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## நாடாளுமன்றத் தேர்தலில்

# ம.தி.மு.க. வுக்கான தொகுதிகள் வைகோவுடன் நாளை ஆலோசனை

(சென்னை)

தி.மு.க. கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் இடையே தொகுதி பங்கீடு பேச்சு வார்த்தை தீவிரமாக நடைபெற்றுவருகிறது. பா.ம.க. தொகுதி உடன்பாடு ஏற்பட்டு உள்ளது. அக்கட்சிக்கு தர்மபுரி, பாண்டிச்சேரி, செங்கல்பட்டு, சிதம்பரம், திண்டிவனம், அரக்கோணம் ஆகிய தொகுதிகள் ஒதுக்கப்பட்டன.

இதில், திண்டிவனம் தொகுதி கடந்த தேர்தலில் ம.தி.மு.க போட்டியிட்டு வென்ற தொகுதியாகும்.

ம.தி.மு.கவுக்கு 5 தொகுதிகள் ஒதுக்குமாறு அக்கட்சிகளின் தேர்தல் குழுவினர் வற்புறுத்தி வருகிறார்கள். கருணாநிதியையும் தி.மு.க தேர்தல் குழுவினரையும் இது தொடர்பாக அவர்கள் நேரில் சந்தித்து பேசியுள்ளனர்.

கடந்த தேர்தலின் சிவகாசி, பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சி, திண்டிவனம் ஆகிய தொகுதிகளில் போட்டியிட்டு பழனி தவிர மற்ற 4 தொகுதிகளிலும் வெற்றிபெற்றது.

வைகோ சிவகாசியில் இருந்தும், கண்ணப்பன் திருச்செங்கோடு தொகுதியில் இருந்தும், செஞ்சிராமச்சந்திரன் திண்டிவனத்தில் இருந்தும் டொக்டர் கிருஷ்ணன் பொள்ளாச்சியில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பா.ம.க. திண்டிவனம் தொகுதியை வாங்கிக் கொண்டதால் அதற்கு பதிலாக தஞ்சாவூர் தொகுதியை ம.தி.மு.க. கேட்கிறது.

ஆனால், இந்தத் தொகுதியில் தி.மு.க.வை சேர்ந்த பழனி மாணிக்கம் தற்போது எம்.பி. யாக இருப்பதால் அதைவிட்டுக் கொடுக்க தி.மு.க. முன்வரவில்லை.

ம.தி.மு.வுக்கு 4 தொகுதிகள் ஒதுக்க தி.மு.க. முடிவுசெய்துள்ள சூழ்நிலையில் மேலும் ஒரு தொகுதி வாங்கிவிடுவதில் ம.தி.மு.க. உறுதியாக இருக்கிறது. ம.தி.மு.க. வுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டால் ஏற்கனவே போட்டியிட்ட சிவகாசி, பழனி, திருச்செங்கோடு, பொள்ளாச்சியுடன் வந்தவாசி அல்லது கடலூர் தொகுதி ஒதுக்கப்படலாம் என்ற பேச்சும் அடிபடுகிறது.

ம.தி.மு.க தேர்தல் குழுவினர் எல். கணேசன், செஞ்சிராமச்சந்திரன், கண்ணப்பன், நாசரேத்துரை ஆகியோர் நாளை வைகோவை சந்தித்து பேசவுள்ளார்கள். அப்போது தி.மு.க. ஒதுக்க முன்வந்துள்ள தொகுதிகளை வைகோவிடம் காட்டி ஒப்புதல் பெறுவார்கள். அன்றைய தினம் தொகுதி உடன்பாடு ஏற்படும் என்று தெரிகிறது.

# நாம் சமாதான விரும்பிகள் என்பதை சர்வதேசம் உணர்ந்து வருகின்றது

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ்



சர்வதேச சமூகம் எம்மைப் பயங்கரவாதிகள், சமாதான விரோதிகள் எனக் கருதியகாலம் மாறி, நாம் சமாதான விரும்பிகள் என்பதை உணர்ந்து கொண்டு வருகிறது எனத் தமிழர் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் ரவிராஜ் தெரிவித்தார்.

மட்டுவில் வடக்கு சிறிவேற்பிள்ளை சனசமூக நிலையத்தில் அண்மையில் கடந்த விசேட கலந்துரையாடலில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில் -

தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைந்து தமிழர் போராட்டத்தை, அதன் நியாயபூர்வத்தன்மையை, விடுதலைப் புலிகள்தான் எமது ஏகபிரதிநிதிகள் என்பதை உலகிற்கு எடுத்துக் காட்டிநிற்கும் இந்தவேளையில், எமது இந்த ஒற்றுமையைக் காணச்சகிக்காத சில தீயசக்திகளின் வழிகாட்டலில் - எமது கட்சியின் முன்னாள் தலைவர் வீ.ஆனந்தசங்கரி கட்சிக்கொள்கைகளுக்கு மாறாக நடக்கிறார்.

அவர் இன்று எம்மால் கட்சியிலிருந்து விலக்கப்பட்டு விட்டதால், தமிழர் விடுதலைக் கூட்டணி உடைந்துவிட்டது என யாரும் அஞ்சத்தேவையில்லை. கட்சி, முழுமையாக அதே கட்டுக்கோப்புடன் இயங்குகின்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியினது ஏழு நாடாளுமன்ற அங்கத்தவர்களில், ஆறு பேர் ஒன்றாக இருக்கிறோம். ஒருவர் மட்டுமே விலகியுள்ளார்.

அறுபதினாயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள், பல்லாயிரம் மாவீரர்களின் இழப்புக்களின் பின்னரும், தமது சொத்துக்கள், செல்வங்களை இழந்த பின்னரும் எமது போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் சக்திகளுடன் இணைந்து, போராட்டத்தை வலுவிழக்க வைக்க நாம் விரும்பவில்லை.

இன்று நாம் நினைத்தால் அரசுடன் பேரம்பேசி அமைச்சுப் பதவிகளைப் பெற்று, சலுகைகளை அனுபவிக்கமுடியும். ஆனால் நாம் அற்ப, சொற்ப சலுகைகளுக்கு ஆசைப்பட்டு எமது கொள்கைகளை விட்டுக் கொடுக்கத் தயாரில்லை. எமது மக்களின் பிரச்சினைகளைப் பேரினவாதிகளின் மத்தியில் நாடாளுமன்றில் எமக்கு எந்த எச்சரிக்கையும், அச்சுறுத்தல்களும், வந்தாலும் எடுத்துக்கூறுவோம் எனத் தெரிவித்தார்.

நிலையத்தலைவர் தலைமையில் நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில் - இளைப்பாறிய கல்விப் பணிப்பாளர் ச.சின்னத்தம்பி, இளைப்பாறிய கணக்காய்வு அத்தியட்சகர் ஆ.சுந்தரலிங்கம், நிலையப் போசகர் சிவகுரு, "அம்டா" நிறுவனப் பிரதிநிதி, மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம் ஆகியோரும் உரையாற்றினர்.

மட்டுவில் வடக்கு, மட்டுவில் கிழக்கு, சரசாலை தெறகு கிராம அலுவலர் பிரிவுகளில் 2004 ஆம் ஆண்டில் செய்யப்படவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த ஒரு மகஜர் - இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜிடம் கையளிக்கப்பட்டது.

இங்கு உரையாற்றிய "அம்டா" நிறுவனத்தினது வெளிக்களத் திட்டப்பணிப்பாளர் - மேற்படி நிறுவனத்தின் ஊடாக ஸ்ரீ வேற்பிள்ளை சனசமூக நிலையத்தில், தென்னைப் பயிர்செய்கை, பண்ணைச்செய்கை, சம்பந்தமான வகுப்புக்குள் நடாத்தவும், மிருகவைத்தியர்களை அழைத்துப் பிரதி சனி, ஞாயிறுகளில் - ஆடு, மாடு, கோழி வளர்ப்புத் தொடர்பான ஆலோசனைகளும், சிகிச்சைகளும் வழங்க உத்தேசித்துள்ளதாகவும் தெரிவித்தார்.

இந்த சனசமூக நிலையம் "அம்டா" நிறுவனத்தின் நிதி உதவியுடன் புனரமைக்கப்பட்டு, இயங்கிவருகின்றமையும், இந்த நிலையத்திற்கு தளபாடங்கள், ஜெனரேற்றர் உட்படப் பெறுமதி வாய்ந்த பொருட்கள் வழங்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (24)



பசுக்கள், இடபங்களை பாதுகாக்கும் சமய நிறுவனங்களின் இணையம் பட்டிப்பொங்கல் தினத்தன்று யாழ். சத்திரம் வைரவர் ஆலயத்தில் நடாத்திய பட்டிப்பொங்கல் விழாவின் போது, யாழ்.நகர வீதிகள் வழியாக மேளதாள வாத்தியங்களுடன் பசுக்கள், இடபங்கள் ஊர்வலமாக அழைத்துவரப்படும் காட்சி.

# மோசமானநிலையிலுள்ள வீதி; பொதுமக்கள் பெரிதும் பாதிப்பு !

(வடமராட்சி)

பருத்தித்துறை 1 ஆம் கட்டை சந்தியிலிருந்து தம்பசிட்டியை நோக்கி செல்லும் பாதை - குண்டும் குழியுமாகக் காணப்படுவதால், இந்த வீதியால் போக்குவரத்துச் செய்யும் பாடசாலை மாணவர்கள் பெரிதும் பாதிகப்படுகின்றனர்.

பருத்தித்துறையிலுள்ள முக்கிய மூன்று பெரிய பாடசாலைகளான மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை, ஹாட்லிக் கல்லூரி, வட இந்து மகளிர் கல்லூரி, ஆகியவற்றில் கல்விபயிலும் 2 ஆயிரத்திற்கும் அதிகமான மாணவர்கள் போக்குவரதது் செய்யும் பாதை இதுவாகும். அத்துடன், பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 751 இலக்க பஸ் மற்றும் மினிபஸ்கள் அனைத்தும் இந்தப் பாதை வழியாகவே பயணத்தை மேற்கொண்டு வருகின்றன.

இந்தப் பாதையின் சீர்கேட்டால், இந்தப் பாதையால் போக்குவரத்துச் செய்யும் பொதுமக்களும் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். மூன்று தனியார் கல்வி நிலையங்களும் இந்தப் பாதையில் உள்ளது. இதனால் கல்விநிலையங்களுக்குச் செல்லும் மாணவர்களும் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர். இந்தப் பகுதி மக்கள்- இந்தப் பாதையைப் புனரமைப்பு செய்து தரும்படி சம்பந்தப்பட்டவர்களுக்கு கோரிக்கை விடுத்தும், இது வரை எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென மக்கள் தெரிவிக்கின்றனர். (17)

# நெடுந்தீவில் கடனுதவிகள் குறித்து மாவட்ட சமாசப் பிரதிநிதிகள் சந்திப்பு

யாழ்.மாவட்ட சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்க சமாசத்தினர்- நெடுந்தீவிலுள்ள சிக்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கப் பிரதிநிதிகளைக் கடந்த 17 ஆம் திகதி மாலை 3.30 மணிக்கு நெடுந்தீவு மகா வித்தியாலய மண்டபத்தில சந்தித்துக் கலந்துரையாடினர்.

நெடுந்தீவு சிங்கன கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் பணிப்பாளர் சி.தில்லையம்பலம் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், மாவட்டச் சங்கத்தின் தலைவர் ச.முருகநேசன், உபதலைவர் ச.செல்வரட்ணம், மாவட்டச் செயலாளர் சு.நகுலேஸ்வரன் மற்றும் பிரதேச ரீதியான பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இந்தச் சந்திப்பில் நெடுந்தீவிலுள்ள 14 சங்கங்களில் 07 சங்கங்களைச் சேர்ந்த 40 இற்கும் மேற்பட்ட உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டுறவு வாரத்தையொட்டி, கடன் வாழங்கல் மூலம் அபிவிருத்தியை மேற்கொள்ளல், கலை, பண்பாட்டு, விளையாட்டுதுறைகளை மேம்படுத்தல் மற்றும் மந்தை வளர்ப்பு கடன், விவசாயக்கடன், வறியோர் கடன், நுண்கருத்திட்டக் கடன போன்ற கடன்களைக் குறைந்த வட்டி வீதத்தில் வழங்குதல் போன்ற விடயங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பில் ஆராயப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் நெடுந்தீவு பிரதேசத்திற்கான பிராந்தியசபைக்குரிய புதிய நிர்வாகத்தினர் தெரிவு செய்யப்பட்டனர்.

இந்தப் சபையின் தலைவராக நா.ம.எட்வேர்ட்டும், செயலாளராக பா. இரட்னேஸ்வரியும் மற்றும் நிர்வாக சபை உறுப்பினர்களும் தெரிவுசெயயப்பட்டனர்.

பல வருடகாலங்களின் பின்னர் சிங்கனக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசப் பிரதிநிதிகள், நெடுந்தீவுக்கு வந்து நிலைமைகளை நேரில் கண்டறிந்து செல்வது குறிப்பிடத்தக்கது. (113)

# குருநகர் புதுமைமாதா நவநாள் திருவிழா

குருநகர் - பாங்ஷால் வீதி, புதுமைமாதா ஆலய நவநாள் திருவிழா நேற்று கொடியேற்றத்துடன் தொடங்கி, பெப்ரவரி 3 ஆம் திகதி செவ்வாய்கிழமைவரை தொடர்ந்து நடைபெறும்.

தினமும் மாலை 5.15 மணிக்கு செபமாலை, பிரசங்கம், திருப்பலி, சொரூப ஆசீர்வாதம் என்பன நிகழும்.

எதிர்வரும் பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 5.30 மணிக்கு நற்கருணை விழாவும், சுற்றுப் பிரகாரமும் இடம்பெறும். 3 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 7.30 மணிக்கு திருநாள் பாடல், கூட்டுத்திருப்பலி யாழ்.ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும். மாலை 5.30 மணிக்கு திருச்சொரூப பவனி ஆரம்பமாகி, முடிவில் ஆசீர்வாதம் வழங்குதலுடன், வருடாந்த நவநாள் கொண்டாட்டங்கள் முடிவுபெரும். (206)

# நெடுந்தீவுப் பகுதியிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவுக்குட்டபட்ட பகுதிகளிலுள்ள வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய் தடுப்பூசி ஏற்றல் இன்றும், நாளையும் நடைபெறவுள்ளது. நெடுந்தீவு மேற்கிலுள்ள வளர்மதி சனசமூகநிலையம், பொது நூலகம், ஐக்கிய தீப சனசமூகநிலையம், பாலமுருகன் முன்பள்ளி ஆகிய இடங்களிலும் - நாளை காலை தொடக்கம் சென்ஜேம்ஸ் சனசமூக நிலையம், மத்திய சனசமூகநிலையம், பிரதேசசபை, சென்.அன்ரனீஸ் சனசமூகநிலையம், குழந்தை இயேசு சனசமூகநிலையம், கிழக்கு சனசமூகநிலையம், பொது சுகாதாரப் பரிசோதகர் அலுவலகம் ஆகிய இடங்களில் கட்டம் கட்டமாகத் தடுப்பு மருந்து வழங்கப்படவுள்ளது.

தற்போது யாழ்.மாவட்டத்தில் விசர்நாய்க்கடிக்கு உள்ளாவோர் தொகை நாளுக்குநாள் அதிகரித்து வருவதனால், இந்த தடுப்பு மருந்தேற்றலின் போது, சகலரும் தங்கள் வளர்ப்பு நாய்களை கொண்டுவந்து மருந்தேற்றி, எதிர்காலத்தில் விசர்நாய்க்கடி நோய்வராத வகையில் ஒத்துழைப்பு வழங்குமாறு நெடுந்தீவு பகுதி பொது சுகாதார பரிசோதகர் க.அருந்தவராஜா கேட்டுள்ளார். இந்த மருந்தேற்றல் தொடர்பாக நெடுந்தீவு பகுதி சுகாதாரத் தொண்டர்கள் வீடுவீடாகச் சென்று தகவல்களைத் தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது. (113)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

முதலாவது அகவையில்



பெயர் : த.திலக்ஷிகா
முகவரி : கைதடி நுணாவில், சாவகச்சேரி.


## சின்னஞ்சிறு செய்திகள்

### வளர்ப்பு நாய்களுக்கு நெல்லியடியில் தடுப்பூசி

(நெல்லியடி)

வளர்ப்பு நாய்களுக்கான விசர் நோய் தடுப்பு மருந்தேற்றல் - நெல்லியடி பிரதேசத்தில் நாளை இடம் பெறவுள்ளது.

காலை 9 மணிமுதல் 10.30 மணிவரை கரவெட்டி மத்தியில் அமைந்துள்ள கச்சை ஐங்கரா நெசவுசாலை முன்றலிலும், 11 மணி முதல் 12.30 மணிவரை கிழவி தோட்டம் சனசமூக நிலையத்திலும,

நண்பல் 1 மணிமுதல் 2 மணி வரை கரவெட்டி மத்தி சிந்தாமணி சனசமூக நிலையத்திலும், 2 மணி முதல் 3 மணிவரை தில்லை ஐங்கரா சனசமூக நிலையத்திலும் விசர்நாய் தடுப்பு ஊசி ஏற்றல் நடைபெறவுள்ளது.

### சிறுவர் பாதுகாப்பு நிதிய இணைப்புக்குழுக் கூட்டம்

(சுதுமலை)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறுவர் பாதுகாப்பு நிதிய பிரதேசமட்ட இணைப்புக் குழுக்கூட்டம் - எதிர்வரும் புதன் கிழமை பிற்பகல் 3 மணிக்கு மேற்படி பிரதேச செயலக மாநாட்டு மணடபத்தில் நடைபெறவுள்ளது.

பிரதேச செயலாளர் தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த நிகழ்விற்கு, தங்கள் பாடசாலையில் உள்ள சிறுவர்களின், மாணவர்களின் பிரச்சினைகளினை ஆராய்ந்து, அது சம்பந்தமான அறிக்கையினை கொண்டுவருமாறு பாடசாலை அதிபர்களிற்கு அழைப்பு விடப்பட்டுள்ளதுடன், இரு மாணவர்களையும் தம்முடன் அழைத்துவருமாறு வேண்டப்பட்டுள்ளனர். (44)

### எரிபொருள் நிரப்புநிலையம் தீ வைப்பு

(சுதுமலை)

மானிப்பாய் எரிபொருள் நிரப்பு நிலையம் கடந்த செவ்வாய்க் கிழமை இனந்தெரியாதோரால் தீயிட்டு எரிக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

மானிப்பாயில் இயங்கிவரும் மானிப்பாய் பரிஸ் பலநோக்கு கூட்டுறவுச்சங்கத்திற்குச் சொந்தமான எரிபொருள் நிரப்பு நிலைய பெற்றோல் பம் இயந்திரமே விசமிகளால் முழுமையாகத் தீயிட்டு எரிக்கப்பட்டநிலையில் காணப்படுகின்றது.

இது சம்பந்தமாக மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, பொலிசார் ஸ்தலத்திற்குச் சென்று எரிந்த பகுதியைப் பார்வையிட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (44)

### ஆடைத்தயாரிப்பு நிறுவன நேர்முகப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வேலைவாய்ப்பற்றிருக்கும் இளைஞர், யுவதிகளுக்குத் தனியார் துறையில் வேலைவாய்ப்பு தொழிற் பயிற்சி வழங்கும் நோக்கில், தொழிறதுறைத் திணைக்கள யாழ்.மாவட்ட அலுவலகம் செயற்பட்டுவருகிறது.

ஏற்கனவே விண்ணப்பங்கள் கோரப்பட்டிருந்த நவீன ஆடையாரிப்பு நிறுவனத்திற்கான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை - நாளை மறுதினம் செவ்வாய்கிழமை காலை 9 மணி தொடக்கம் சுன்னாகத்தில் (ராஜா கொம்பிளெக்ஸ் கட்டடத்தில்) நடைபெறவிருக்கிறது.

இதற்கான தனிப்பட்ட கடிதங்கள் ஒவ்வொரு விண்ணப்பதாரிக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் தகைமைச் சான்றிதழ்களுடன் சமுகம் தரும்படி, மாவட்ட தொழிற்துறைத் திணைக்கள அலுவலர் கேட்டுள்ளார்.



## கலாசாரம்

# சூடாத மலர் (கள்)

தொடர்கதை

அங்கம் - 2



**பூ.நகுலன்**

அவர் கூட்டிவந்த பையன் குடும்பம், அவளைப் பார்த்து விட்டுச் சென்றவை. பின்னர் ஒரு மாதத்திற்கு பிறகு வேறை ஒரு இடத்திலை திருமணம் செய்து போட்டினம். என்றெல்லாம் அவனுக்கு அவளுடைய பெற்றோர் கூறியது மனத்தில் ஏதோ படமாக விழுந்திருக்கவேண்டும். அவனும் அவளைப் பார்த்துச் சிரித்து விட்டுச்சென்றான். அவன் அழகில் சுமாராக இருந்தான். தொழிற்பயிற்சிக்குச் சென்றிருந்த காரணத்தால், அவனிடம் பேச்சுவன்மை மிகுதியாய் இருந்தது. பல்வேறுபட்ட மக்களையும் அவன் சந்தித்திருப்பான். அவன் மீண்டும் ஒருமுறை வெளிநாடு சென்று வர வேண்டும் என அவனுக்கு அவனது தகப்பனார் வேண்டுகோள்விடுத்திருந்தார். தொழிற்பயிற்சியின் சில வேலைத் திட்டங்கள் பற்றிய பயிற்சி இன்னமும் நிறைவு அடையாமல் இருந்ததே, அவன் மீண்டும் வெளிநாடு செல்லவேண்டியதன் காரணமாக இருந்தது.

வெளிநாட்டில் இருந்த காரணத்தினால் அவன் வயதுக்கு மீறிய தோற்றமும், வயதுக்கு மீறிய வளர்ச்சியும் உடையவனாக இருந்தான். இவனுடைய வயதுக்கும் அவளுடைய வயதுக்குமிடையே 5,6 வயதுகள் வித்தியாசம் இருந்தன. அவள் அதிகமான வயதினை உடையவளாக இருந்தாள்.

ஒருமுறை அவளுடைய பெரிய தாயார், அவனுக்கு அவளின் வயதிருந்தால் அவனை எப்படியோ இவ ளுக்கு கட்டி வைச்சிருக்கலாம் என்று பேசியதுண்டு. அவ்வ ளவு அவன் அவளுக்கு பொருத்தமுடையவனாக இருந் தான். ஆனால் அதையெல்லாம் யோசித்துப் பார்த்திராத அளவில் காரியங்கள் நடந்தன.

அவள் ஆலயம் சென்று தனது வழமையான வேலைகளிலும் ஈடுபட்டுக்கொண்டு வந்தாள். அந்தவேளையில் தான், ஆலயத்தின் திருவிழா நாட்கள் தொடங்கின. அந்த வசந்த காலத்தின் மலர்கள் எல்லாம் நிறைந்த மணம் உடையனவாயும், அதிகம் மரங்களிலே பூத்தும் காணப்பட்டன. அவற்றைப் பார்க்கும் போதெல்லாம் அவள் மனது ஆண்டவனையே நினைக்கும். அத்தனை மலர்களும் ஆணடவனுக்கே சென்றுவிழும். ஆலயத்தில் திருவிழா தொடங்கிய காரணத்தால், அவள் தினமும் ஆலயம் சென்று வர வேண்டிய சூழ்நிலை. ஒவ்வொருநாளும் காலையில் - மாலையுடன் செல்வாள். மாலையில் மாலையை ஆண்டவனுக்குக் கொடுத்துவிட்டு வருவாள். இரவுவேளைகளில் சில சமயம் தன்னுடைய சகோதரி அல்லது பெற்றோர் சகிதமாக கோயிலுக்குச் சென்று வருவதுண்டு.

ஆலயத் திருவிழா ஆகையால், அவனும் அந்த ஊரில் வசிப்பவன் ஆயிற்றே. எனவே, அவனும் அந்த ஆலயத்திற்கு வருவதுண்டு. அவன் அவளைக் கண்டு அடிக்கடி சிரிபபதுண்டு., கதைப்பதும் உண்டு. அவளுக்கும் அவனோடு கதைப்பதில் ஒருவித உணர்வும் ஏற்படுவதில்லை. தன்னுடைய தம்பியோடு கதைப்பது போன்ற உணர்விலேயே கதைத்து வந்தாள். ஒருமுறை இவள் மாலையுடன் ஆலயம் சென்றபோது, ‘மாலை கொடுக்கத்தானே கோயிலுக்குப் போகின்றீர்கள். நான் வேணுமென்றால் கொடுத்து விடுகின்றேன். நீங்கள் என்னிடம் தாருங்களேன் மாலையை’ என்று அவன் கேட்டான். அவளும் அதில் எதுவித வேறுபாட்டையும் காட்டாமல் அவனிடம் மாலையைக் கொடுத்து ‘சரி நல்லதாயப் போய்விட்டது. வீட்டில் சமையலுக்கு உதவி புரியும்படி அம்மா கேட்டார். நான் மாலையைக் கொடுத்துவிட்டு வருகின்றேன் என்று கூறிவிட்டு வந்தேன். ஆண்டவரே எதிரில் வந்து கேட்டதுபோல நீங்கள் வருகின்றீர்கள். சரி கொண்டுபோய்க் கொடுங்கள்’ என்று எதுவித பதட்டமோ ஒன்றையும் காட்டாமல், அவனிடம் மாலையைக் கொடுத்துவிட்டு வந்தாள். அவள் அவ்வாறு கோயிலுக்குச் செல்ல நேரமில்லாத நேரத்தில் மாலையைக் கட்டித் தன் தம்பியிடம் இதைக் கொண்டுபோய்க் கோயிலில் கொடுத்து விட்டுவா என்றால், கொடுத்துவிட்டு வருவான் அவளின் தம்பி.

ஆனால், அவனுடைய மனத்திலே ஆயிரம் கற்பனைகள முளைத்திருக்க வேண்டும். அவள் மாலையைக் கொடுத்ததே பெரிய அதிர்ஷ்ரமாக அவன் நினைத்தான். ஆயிரம் சிறகுகள் கட்டி வானத்தில் பறந்தது போன்ற உணர்வு ஏற்பட்டதாகத் தன் நண்பர்களிடம் இது பற்றி அவன் குறிப்பிட்டிருந்தான்.

இன்னொரு சமயம் அவள் கோயிலிருந்து வீட்டுக்கு வந்துகொண்டிருந்தாள். அவள் வீட்டுக்கு வருவதைப் பார்த்துக்கொண்டிருந்த அவன், தன்னுடைய மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு அவள் பின்னே வந்தான். அவள் தனியாக வீட்டுக்கு வந்துகொண்டிருந்ததே அதற்குக் காரணமாக இருந்தது. அவளுக்குப் பின்னால் மிகச் சமீபத்தில் வந்து, திடீரென பிரேக்கைப் போட்டு ‘வீடுவரையும் நானும் போகின்றேன் - ஏறுங்களேன்’’ என்றான். அவளும் அதில் ஒருவித வித்தியாசமான எண்ணங்களும் படாதகாரணத்தால், மோட்டார் சைக்களில் ஏறி உட்கார்ந்தாள்.

அவனுடைய மணநிலை சொர்க்கத்தில் தேரில் பறப்பது போன்று இருந்தாக தன்னுடைய நண்பர்களிடையே அவன் இது பற்றிக் கூறிக்கொண்டிருந்தான். நண்பர்களிடையே தான் ஒரு கதாநாயகத் தன்மை பெற்றவன்போல, அவன் நடந்து கொள்வதுண்டு. அவனுடைய செயல்களும் அவனுடைய செல்வாக்கும் அவனை அவ்வாறு நடந்துகொள்ள வைத்தன. அதனால், அவன் வித்தியாசமாக நோக்கப்பட்டான். அன்று ஆலயத்தின் வேட்டைத்திருவிழா. அவளின் அருகே அவன் இரண்டு ஐஸ்கிறீம்களை கையில் வாங்கிய வண்ணம் வந்தான். அவளிடம் ஒன்றை நீட்டினான். அவளும் அதை மறுப்புச் சொல்லாது



தன் கையில் வாங்கிக்கொண்டாள். அவன் அவளிடம் ஐஸ்கிறீமைக் கொடுத்த வெற்றியில், அருகிலிருந்த இடத்தைக் காட்டி ‘இதிலிருந்து நாம் ஐஸ்கிறீம் குடிப்போமா’ என்று கேட்டான். அவளும் சரியெனக் கூறி அந்த மணல் பரப்பப்பட்ட குளிர்ச்சியான நிலத்தில் இருந்தாள். ‘ஐஸ்கிறீமும் குளிர்ச்சியாய் இருக்கு. இந்த மணல் இருக்கையும் குளிர்ச்சியாய் இருக்கல்லே’’ என்று அவன் மெதுவாகக் கதைத்தான். “ஓம் ஓம் ஐஸ்கிறீம் என்றால் குளிர்ச்சியாய்த்தானே இருக்கும்’’ என்று சொல்லிய பின்னர்தான் யோசித்தாள். இவனுடைய செய்கையும், பேச்சும் இன்று வித்தியாசமாகப் போவதை. அவள் இடையில் இதைவெட்டவேண்டும் எனக் கருதி “அங்கே சாமி உள்ளே கொண்டு போகிறார்கள். நான் சாமியைக் கும்பிட்டுவிட்டுப் போகின்றேன். ஐஸ்கிறீம் வாங்கித் தந்ததற்கு நன்றி என்று கூறிய வண்ணம் அவள் அவனை விட்டு அகன்றாள்.

அனறும் இதேபோலத்தான் ஒரு சம்பவம் நடந்தது. ஆனால், அதில் அவன் தன் கருத்தை அவளிடம் சொன்னான். அதனால் அவள் கோபம்கொண்டு பேசினாள். “நானுங்களைக் காதலிக்கிறன். நீங்கள் என்னைக் காதலிச்சா இரண்டு பேரும் சேர்ந்து வாழலாம். அப்படி இல்லையெண்டால் நான் என்னுடைய தொழிலைத்தான் காதலிப்பேன்’’ என்று ஒரு மாதிரியாகத் தட்டுத்தடுமாறி தன் கருத்தை அவளிடம் அவன் சொன்னான்.

அவள் அவனுடைய சொற்களைக் கேட்டு எதுவிதமான உணர்ச்சியும் அடைந்தவளாகக் காணப்படவில்லை. ஏனென்றால், அவனுடைய வயது அப்படியான வயது இல்லை என்பதே காரணமாய் இருந்தது. அவனிடம் அவள் கூறினால் ‘தம்பி நீ இப்படியெல்லாம் என்னைக் கேட்கக்கூடாது. என்னிடம் இப்படி ஒரு நோக்கம் வைத்துப் பழகுகின்றாய் என்று தெரிந்திருந்தால், முன்னமே நானுன்னுடைய உறவினை வெட்டியிருப்பேன். என்னுடைய வயதில் உனக்கு ஒரு அக்கா இருக்கிறாள் எனபதை எண்ணிப்பார். உன்னுடைய அப்பா, அம்மா இதை அறிந்தால் எவ்வளவு கோபம் கொள்வார்கள் என்பதை கொஞ்சம் யோசித்துப்பார். இதோட இந்தக் கதையை விட்டு விடு’’ என்று அவனுக்கு அவள் புத்திமதி கூறினாள். ஆனால், அவன் விட்டபாடாக இல்லை. அவள் வீடுவரையும் வந்து, அவளை விட்டு விட்டுச் சென்றான். தன் கருத்தில் அவன் உறுதியாய் இருப்பதாக அவளிடம் அவன் சொல்லிச் சென்றான்.

அவள் இந்த விடயம் பற்றி எவரிடமும் பேசிக்கொள்ளவில்லை. ஒருவர் எந்தவிடயமானாலும் என்ன, தனக்கு நம்பிக்கையான ஒருவரிடம் சொல்லிவிடவேண்டும். இல்லையென்றால் மன அழுத்தங்களுக்கு ஆளாகவேண்டியிருக்கும் என்று அவள் எங்கோ படித்தது ஞாபகம் வந்தது. எனவே, அவள் அந்த விடயம் பற்றி வீட்டில் பெரியதாயாரிடம் கூறினாள். அவரும் “அவன்ரை வயதென்ன. உன்ரை வயதென்ன. அவன் சின்னப் பெடியன் கேட்கிறான் எண்டுட்டு நீயும் பெரிசாய் எடுத்துக் கொண்டு வந்திட்டாய்’’ என்று தானிருந்த உணர்வின் வெளிப்பாடாய் மிகுந்த கோபத்துடன் கூறினார். ஆகவே அவள் இதுபற்றி வேறு எவரிடமும் கூறிக்கொள்ளவில்லை.

ஒரு சில நாட்கள் சென்றன. அவன் அவளின் வீட்டுக்கு வந்தான். சாதாரண நிகழ்ச்சியாக அவளுடைய பெற்றோரிற்கு அவன் வருகை அமைந்தது. ஆனால், அவனுக்கு அது அவசியமாக இருந்தது. அவளுக்கோ நெருப்பை நெஞ்சில் கொட்டியது போன்ற உணர்வு ஏற்பட்டது. அவன் என்ன கூறப்போகின்றானோ என்ற உணர்வில் அவள் இருந்தாள்.

ஆனால், அவன் நான் நாளைக்கு வெளிநாடு போகப் போகிறேன். அப்பா கொஞ்ச நாளைக்கு வெளிநாட்டிலை நிக்கச் சொல்லிக்கேட்டிருக்கிறார். அதாலை உங்களிட்டைச் சொல்லிப்போட்டு போவம் எண்டுதான் வந்தனான் என்று அவளுடைய பெற்றோரிடம் தெரிவித்தான். அத்தோடு, தான் வெளிநாட்டிலை நின்றபோது ஏற்பட்ட அனுபவங்களையும், இனி எப்ப ஊருக்கு வருவது பற்றியும், ஊரில் நின்றபோது ஏற்பட்ட அனுபவங்களையும் சொல்லிக் கதைத்துச் சிரித்துக்கொண்டிருந்தான்.

ஆனால், அவன் அவளை இடையிடையே பார்ப்பதும் அவளுடைய பெற்றோர் வீட்டிற்குள் சென்றபோது இவள் தனிமையில் நின்ற வேளைகளில் “என்ன மாதிரி, நான் கேட்டது பற்றி நீங்கள் யோசிக்கிறனீங்களா’’ என்று கேட்பதுமாக அவன் இருந்தான். அவள் அதற்கு “நான் முன்பு கூறியதுதான் இப்பவும். அதில் எந்தவித மாற்றமும் இல்லை. என்னுடைய தம்பியின் வயது உனக்கு. எனக்கு உன்னுடைய அக்காவின் வயது’’ என்று கூறி அவனின் கேள்விகளுக்கு மறுப்புச்சொல்லியே வந்தாள். அவன் இப்படியாக நீண்ட நேரம் அவள் வீட்டில் நின்று விட்டு, அவன் வெளிநாடு சென்றுவிட்டான்.

அவள் மனநிலை வழமையானதாகவே இருந்தது. ஆலயத்தின் திருவிழாவும் முடிந்துவிட்டது. ஆனாலும், ஆண்டவனுக்கு மாலை தொடுத்துக் கொடுக்கின்ற அவளது பணி மட்டும் நின்றுபோகவில்லை.

இவ்வாறு அவள் இருந்த ஒரு நாள்தான், அவள் வாழ்க்கையில் வீசிய தென்றல் என கருதும்படியான இந்த நிகழ்ச்சி புயலாக மாறியது.

அவள் அன்றைக்கு அவனுடைய அம்மாவை எதிர்பாராதவிதமாகக் கோயிலில் சந்தித்தாள். அவனுடைய அம்மாவை வழமையாகக் கோயிலில் சந்திக்காதுவிட்டாலும், அடிக்கடி என்றில்லாமல் சந்திப்பதுண்டு. அன்றைக்கு அவள் அப்படியான ஒரு உணர்வில்தான் அவள் அவனுடைய அம்மாவைச் சந்தித்தாள்.

ஆனால், அவனுடைய அம்மாவோ அவளைப் பார்த்த விதமும், அவளோடு கதைத்த விதமும் வித்தியாசமாகவே இருந்தது. அவனுடைய அம்மா அவளிடம் வந்து “தங்கச்சி இப்படி அவன் சொல்லிப்போட்டுப் போட்டான்’’ என்ற பீடிகையோடு கதையைத் தொடக்கினாள்.

“கல்யாணம் ஒன்று செய்தா தான் உன்னைத்தான் கட்டுவானாம். இல்லையெண்டால் கல்யாணமே வேண்டாம் என்று சொன்னான். நீயும் அவனும் கோயில் திருவிழாக்களிலை எல்லாம் சேர்ந்து எடுத்த படங்களை எல்லாம் தன்னுடைய நண்பர்களிடம் காட்டி, இவளைத்தான் நான் கல்யாணம் செய்யப்போகின்றேன் என்று சொல்லித்திரிகின்றான. என்ன நடக்கப்போகின்றதோ தெரியவில்லை. நீ அப்படியோ அவனோட பழகினனீ. அவன்ரை மனதிலை இப்படியெல்லாம் கேட்கிறான். நான் என்ன செய்யிறது எண்டு தெரியாமல் இருக்குது. எல்லாம் ஆண்டவன் விட்ட வழி’ என்று, அவனுடைய அம்மா அவளிடம் தன் கண்களிலிருந்து கண்ணீரைச் சிந்தியபடியும், அவள் மேல் குற்றம் சுமத்துவது போன்றும் கேட்டாள்.

இதனைக் கேட்ட அவளின் காதுகள் அடைப்பது போன்று இருந்தது. யாரோ தன்னைச் சம்மட்டியால் தாக்குவது போன்ற உணர்வில் அவள் இருந்தாள். கோயிலிலிருந்து வீடு வந்து சேர்ந்தாள். வழியெல்லாம் இதே யோசனை. வீட்டிலே பேருக்காகச் சாப்பிட்டாள். *(தொடரும்)*



# தமிழ்!

**வே**ரோடு பழகி
உதிர்ந்த பூக்களிடம்
நட்புக் கொண்டு
வானத்து முகிலை வடித்த
மழை போல்
மண் மணத்துடன்
தெளிந்து
நனைக்கிறது!

வெட்ட வெளியில் மணல்
மேற்பரப்பில்
ஈடுபட்டு.
ஆறுதலடைய நிழல்
இல்லாமல்
தனக்குத்தானே
வேர்வையில் குளிர்காய்ந்தும்
தவித்துக்கொண்டிருக்கிறது
தாகம் இல்லாமல்!

சூடாக நெருப்புக்கும்
குளிராகத் தண்ணீருக்கும்
மட்டுமல்ல
உசுப்பேத்தி தலையில் குட்டி
நரம்புக்கும்
தொற்றிக்கொண்டிருக்கின்றது!
விடைபெற்றுப்போக
முடியாத
வரவேற்பு மண்டபத்தில்
உட்புகுந்த
எல்லாப் பக்கமும்
அமர்ந்து
விரிவுரை
நடத்திக் கொண்டிருக்கின்றது!

வான வேடிக்கையில்
பண்டிகை திருநாளில்
இரவின்
ஒளியாக
பல வடிவங்களாக
கண்ணினை மறைத்து
விடிய முன்னர்
போய்விடும்
வெளிச்சமல்ல!

இரத்த கீறல்களுடன்
பயப்புடுத்தி
உலர்ந்த நாக்கில்
ஊறிய எச்சிலில்
ததும்பி நிற்க
பேசமுடியாமல் போனது!

விட்டுக் கொடுத்து
வந்தவர்கள் வரவேற்று
கைக்கெட்டிய தூரம்
வரை
வழியனுப்பிவிட்டு
வந்தபோதும் கூட
ஒரு தடவை
திரும்பிப் பார்த்தும்
உறுதி செய்து
நிறைவு பெறுகிறது!

**செல்வம்** - துன்னாலை

# கிழக்கும் மேற்கும்

## ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரும் வீரமாமுனிவரும்



**ப**ரமார்த்த குருவைப் பற்றி
அங்கதச் சுவையி னோடே
தரமுயர் கதைகள் தமிழில்
உரைநடை வடிவி லாக்கி
'அங்கதச் சுவையைத் தமிழில்
உரைநடை வடிவில் முதலில்
அறிமுகம் செய்தார்' என்னும்
பெருமைக்கு முரிமை பெற்றார்!
தமிழ்மர பதனைப் போற்றிப்
புதுப்புது அணிகள் சேர்த்துத்
தவமகன் யேசு பிரானின்
தந்தையாம் சூசை யப்பர்
தலைவராய் விளங்கும் வண்ணம்
தமிழ்மணம் பரவும் வண்ணம்
தமிழறிந் தோர்கள் போற்றத்
'தேம்பா வணி' யென் றோதும்
காவிய மொன்றைத் தந்து
பணியிலே உயர்ந்து நின்றார்!
மேவிய பணியில் இன்னும்
பற்பல நூல்கள் செய்தார்!
தமிழின்பால் மாறாக் காதல்
கொண்டஇவ் வறிஞன் யாரோ?
தமிழ்ப்பணிக் கென்றே தன்னை
அளித்தஇவ் வறிஞன் யாரோ?
மதுரைக்கு வந்து சேரும்
வரையிவர் பெயரோ 'பெஸ்கி'!
மதுரைக்கு வந்த பின்னால்
'வீரமா முனிவர்' ஆனார்!
தமிழுக்குத் தொண்டு செய்தார்க்
சிறப்பில்லை என்று சொல்வார்!
தமிழ்த் தொண்டர் 'பெஸ்கி' எங்கள்
தமிழுடன் தமிழே யானால்!!

நாவலர் கிழக்கிற் தோன்றிக்
கிறிஸ்தவ வேத நூலாம்
நானிலம் போற்றும் 'பைபிள்'
நூலினைத் தமிழிற் தந்தார்!!
மேற்கினி லுதித்த 'பெஸ்கி'
கிழக்குக்கு வருகை தந்து
போற்றிடும் குறளை லத்தீன்
மொழியினிற் பெயர்த்துத் தந்தார்!!

**முருகு**

**ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர்**
**18.12.1822 - 05.12.1879**

**வீரமாமுனிவர்** (யோசப் கொன்ஸ்டன்டைன் பெஸ்கி)
**1680.11.08 - 1747.02.04**

# நூல் அகம்

## குருதி பூத்த வெள்ளரசு




"குருதி பூத்த வெள்ளரசு" என்ற கவிதைத் தொகுப்பு நூலினை கணபதி கணேசன் எழுதியிருக்கின்றார்.- உலகத்தமிழர் நிவாரண நிதிக்காக இந்த நூலினை வெளியிட்டுள்ளார்.

தமிழ் நாட்டில் முன்னுரைக்கே முன்னுரையாக எழுதும் திறமை வாய்ந்தவரான கவிஞர் அறிவுமதி இந்த நூலுக்கு முன்னுரை எழுத, பல களம் அறிந்தவரான கவிஞர் காசிஆனந்தன் அணிந்துரை எழுத, பதிப்புரையை இந்நூலிற்குப் பசுபதி சிதம்பரம் எழுத, பின்னுரையை மா.சண்முகசிவா எழுதி இந்த நூலுக்கே மெருகூட்டி, அழகூட்டி நிற்கின்றது.

ஆழக்கடலில் அலையில் எழும்பும் நுரையில், அதன் தாக்கம் தெரியும். அதேபோல், இந்த நூலில் எழுதிய கவிதைகள் அனைத்தும் ஈழத்து தமிழனின் வாழ்வில் நடந்தேறிய நிகழ்வுகளையும், எதிர்கொண்ட விளைவுகளையும் நுரைகளாக நூலினுள்ளே எழுப்பிக்கொண்டிருக்கிறது. தமிழனின் வாழ்நாளில் கறைபடிந்த போராட்ட வாழ்வில் நகர்ந்த நாட்களை என்றைக்கும் ஞாபகப்படுத்தி நிற்கின்றது ஒவ்வொரு பக்கமும்

அதாவது, "இரத்த ஆற்றில் மூழ்கிப்போன தமிழர்கள்...' என்ற தலைப்பில் உருவான கவிதைகளில் ஒரு கவிதை தெரிவிக்கின்றது.

**புதைத்த பிணத்தில் புடவை அவிழ்க்கும் கூட்டம்**
**அது போல்**
**புண்பட்ட தமிழர் நெஞ்சில்**
**பகை வளர்க்கும் கூட்டம்! ஆகும்.**

தமிழர்களின் இழப்புக்களைக் கண்டுகொள்ளாதவர்களும், அதனூடே இலாபம் தேடுபவர்களும் இருக்கும் வரை, போராட்டம் தொடரும். ஒவ்வொரு பக்கமும் கவிதைகள் சொல்பவை தமிழரின் போராட்ட சூழலில் நடந்த நிகழ்வுகளை. பலவிதமான விளைவுகளுக்கேற்ப துல்லியமாகத் தெட்டத்தெளிவாக கவிதை வரிகள் ஒவ்வொன்றும் அமைந்துள்ளது.

அதாவது "இராணுவத் தோழனுக்கு" என்ற தலைப்பில் உருவான ஒரு கவிதை -

**எமது மக்களின் மீட்சிக்காக நான்**
**ஏந்திய துப்பாக்கிகளுக்கும்**
**ஏகாதிபத்தியத்தின் ஏவல் நாயால் தூண்டப்பட்டு**
**நீ தூக்கியிருக்கும் துப்பாக்கிக்கும் உள்ள**
**முரண்பாட்டை பற்றி நீ சிந்தித்ததுண்டா?**

பல போராட்ட வடிவங்களாக போராளிகள் களமுனையில் போராடி வெற்றியீட்டிய நிகழ்வுகளை, ஒவ்வொரு அசைவுகளின் மீதும் நகர்ந்து சென்றிருக்கின்றது இந்தக் கவிதைகள். "அன்புள்ள மொனிக்கா" என சிங்கள பெண்ணுக்கு ஒரு கடிதத்தில் எழுதிய வரிகள் கவிதையில் நயமாகவுள்ளது. சேர்ந்திருக்கும் பிரிந்த உறவுகள் பகிர்ந்து கொள்ளவும், தமிழரின் உணர்வுகளை சிங்களவர் புரிந்து கொள்ளவும் முடிகின்றது.

இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் தாங்கிவரும் நிழல் படம் - நிகழ்வுகளைச் சுடச்சுட சம்பவம் நடந்த இடத்திலே பதிவு செய்யப்பட்டதனால், உயிருள்ள கவிதைக்கு மேலும் உயிரூட்டியுள்ளது. "ஒரு தெருப்புலவனின் புலம்பல்கள்" என்ற தலைப்பில் உருவான ஒரு கவிதை இது -

**நாங்கள்**
**கண்களை விற்றே**
**சித்திரம் வாங்கினோம்**
**சுவர்களை இடித்தே**
**சித்திரம் வரைந்தோம்.**

ஒவ்வொரு தமிழனின் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொருவிதமான அனுபவங்கள். இந்தப் போராட்ட சூழ்நிலையில் வாழ்க்கை நகர்த்தலில் ஏற்பட்ட சலிப்புக்களால் பட்ட இன்னல்களை கவிதை வழியே வடித்திருக்கின்றார் என்பதில் பாராட்டுக்குரியது. யாழ். மண்ணில் பிறந்ததால் தெரிந்திருக்கின்றது மரணங்களின் வலியையும், காணாமல் போனவர்களின் பெற்றோர்களின் வலியையும். "ஒரு யாழ்ப்பாணத்து மரணம்" என்ற தலைப்பில் உருவான கவிதைகளில் ஒரு கவிதை எடுத்துக்காட்டியுள்ளது -

**யார் வேண்டுமானாலும்**
**இறந்து போகலாம்!**
**ஆனால்**
**மரணம் மட்டும்**
**வாழ்ந்து கொண்டிருக்கும்!**

அகதி வாழ்வில் இடம்பெயர்ந்து ஒரு இடமில்லாமல் மரத்தின் கீழிருந்து, பட்ட இன்னல்களில் பட்டினியாலும், நோயினாலும் இறந்து போனவர்களின் உறவுகளின் மனதில் விடுபடாத உணர்வுகளை கவிதையாக வடித்திருக்கின்றார். தமிழர்களின் வாழ் நாளில் அழுது... அழுது... காய்ந்துபோன கண்ணீர் மறுபடியும் ஒருமுறை வந்தது தேர்தலில்தான். "கண்ணீர்" என்ற தலைப்பைக் கொண்ட கவிதைகளில் ஒரு கவிதை உணர்த்தி நிற்கின்றது.

**உங்கள் கஷ்ரம் எல்லாம்**
**எங்களால் தான்**
**தீர்த்து வைக்க முடியும்!**
**வரும் தேர்தலில்**
**எங்களையே தேர்ந்தெடுங்கள் என்று**
**"வாக்கு" கேட்க வந்த**
**வேட்பாளரைக் கண்டதும்**
**கண்களில் நீர் பெருக்கெடுக்க**
**ஆரம்பிக்கின்றது!**

உள்ளே இன்னும் பல கவிதைகள் பெண்களின் பாதிப்புக்களையும், துப்பாக்கி சொன்ன வார்த்தைகளையும், தாயின் மடியினையும், மேதினத்து மேன்மையையும், நம்பிக்கை நட்சத்திரங்களையும், எரிகின்ற தீபத்தில் வடிகின்ற தமிழீழத்தையும், கறுப்பு ஜூலை நாளையும், வெலிக்கடை சிறைக்குள்ளும், சகோதரத்துவத்தையும் கவிதையாக்கி எழுதியிருக்கும் இந்த நூல் - தமிழனின் வரலாறு ஆகும்.

**செல்வா**

## சர்வதேச அரசியல்... - கே.ரீ.கணேசலிங்கம் -

# ஏமாற்றுத்தனத்தைப் பரப்பிவரும் அமெரிக்க போலி யதார்த்தவாதிகள்





**கடந்த தேர்தல் காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும், உள் நாட்டு பலத்தையும் உறுதிப்படுத்த தாம் உழைப்பதாக கூறிய புஷ் ஆட்சிக்கு வந்ததுடன், அதனை வறிய நாட்டுத் தலைவர்கள் போல் காற்றில் பறக்கவிட்டு விட்டார். ஏமாற்றுத்தனத்தை அரசியலாக அமெரிக்கர்கள் மாற்றிவருவது அவர்களது வடிவங்கள் அம்பலத்துக்கு வர ஆரம்பித்துவிட்டதென்பதையே காட்டுகின்றது.**

உலக வல்லரசாக விளங்கும் அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதிக்கான தேர்தல் சூடுபிடித்துள்ளது. ஜனநாயகக் கட்சி வேட்பாளராக ஜோன் கீரி **(John Kerry)** அநேகமாக குடியரசுக் கட்சி வேட்பாளரை எதிர்த்து போட்டியிடத் தயாராகி விட்டார் என்றே கூறலாம். ஆனாலும், அமெரிக்க ஜனநாயகத்தில் இறுதிச் சந்தர்ப்பத்திலும் மாற்றங்கள் நிகழ வாய்ப்புண்டு. ஆனால், குடியரசுக் கட்சி வேட்பாளராகத் தற்போதைய ஜனாதிபதி புஷ் நிறுத்தப்பட்டுள்ளமை தெளிவாகிவிட்டது. இவ்வாரம் அமெரிக்க அரசியலில் பின்பற்றப்படும் தலைமைத்துவ அரசியல் கலாசாரம் எப்படியுள்ளதென சுருக்கமாக அவதானிப்போம்.



மேற்குலகம் என்று பேசப்படும் சொற்பதத்துக்குப் பின்னால் கௌரவமும், பண்பாடும், நல்ல நடத்தையும் முதன்மையானவையாக நோக்கப்படுவதுண்டு. அத்தகைய அம்சம் அரசியல் கலாசாரங்களை அவமதிக்கின்ற போக்குகளும் எம்போன்ற வளர்ச்சியடைந்துவரும் அல்லது பின்தங்கிய தேசத்து புத்திஜீவிகளாலும், சாதாரண மக்களாலும் அளவிடப்படுகின்றது. கீழைத்தேசம் பலவீனமான கட்டமைப்பையும், ஏமாற்றுத்தனத்தையும், கொடுமையான ஆட்சியையும் கொண்டிருப்பதாக மதிக்கப்படுவதுண்டு. இது திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கையின் பிரதிபலிப்பாகவே உள்ளது. கீழைத்தேசத்தை தாழ்த்துவதும் மேற்குலகத்தை உயர்வாகக் கணிக்கவைப்பதும், மேற்குலக ஆதிக்க சக்திகளின் திட்டமிட்ட அழிப்பு நடவடிக்கையாகும். அத்தகைய நிலையில் - மேற்குலகத்தைப் பாதுகாப்பதும், பராமரிப்பதும் இலகுவானதொன்றாக விளங்கும். அதன்மூலம்- சுரண்டல், ஆதிக்கம், செல்வாக்கு என்பவற்றை இலகுபடுத்தலாம் என்பதே அவர்களின் எண்ணமாகும்.

கீழைத்தேசத்தின் அடிப்படைகளை கேள்விக்குட்படுத்தி, அதிலிருந்து கீழைத்தேசத்தின் பலங்களை பலவீனமாக்கி தமது தேசத்தின் அம்சங்களை நிலைநாட்ட முயல்வதையே இது காட்டுகின்றது. இதற்கேற்பவே குடியேற்றவாதமும், நவகுடியேற்றவாதமும் அவர்களுக்கு ஆரம்பத்தில் உதவியது. தற்போது உலக மயப்படுத்தல் என்பதற்குப் பின்னால் பொருளாதாரம், வறுமை, தொழில்நுட்பம், சமாதானம், ஜனநாயகம் என்ற புதிய புதிய சொற்பதங்களை உருவாக்கிக்கொண்டு குடியேற்றவாத காலத்தில் போடப்பட்ட தளத்திலிருந்து செயற்படுவது உணரக்கூடியதொன்றே.

இந்த சூழலில் நாம் அவதானிக்கும் மிக அண்மைய விடயமாக அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் உள்ளது. கீழைத்தேசத்தின் சுயங்களை உடைத்துவிட்டு தமது வடிவங்களை புகுத்திய அமெரிக்கா போன்ற மேற்குலக சக்திகள் கீழைத்தேச ஆட்சியை விமர்சிக்கும் கொச்சைத்தன அரசியலை ஆற்றுகின்றன. கீழைத்தேசத்தை விமர்சித்தவர்கள் தற்போது அதே வேலையைத் தாம் ஆற்றுகின்றனர். அமெரிக்க ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு புஷ் விடும் தேர்தல் வாக்குறுதிகள் அளவிட முடியாதவையாக உள்ளது. கீழைத்தேசத் தலைவர்களுக்கு நிகராகவே அப்பணியை அமெரிக்கர்கள் ஆற்றிவருவதை காணமுடிகிறது. ஈராக் போரை நியாயப்படுத்த உரைத்த பொய்களை மீளவும் புஷ் உறுதிப்படுத்திவருகிறார். ஈராக் போரினால் அமெரிக்காவை பாதுகாத்ததுடன், ஈராக் மக்களையும் பாதுகாத்துள்ளதாக புஷ் கூறுகின்ற பொய் மேற்குலகத்தையும், அவர்களது அரசியல் கலாசாரங்களையும் வெட்கப்படவைத்துள்ளது.

அதுமட்டுமல்ல, கடந்த தேர்தல் காலத்தில் அமெரிக்காவின் பொருளாதாரத்தையும், உள்நாட்டு பலத்தையும் உறுதிப்படுத்த தாம் உழைப்பதாக கூறிய புஷ் - ஆட்சிக்கு வந்தவுடன் அதனை வறிய நாட்டுத் தலைவர்கள் போல் காற்றில் பறக்கவிட்டுவிட்டார். ஏமாற்றுத்தனத்தை அரசியலாக அமெரிக்கர்கள் மாற்றிவருவது அவர்களது வடிவங்கள் அம் பலத்துக்கு வர ஆரம்பித்துவிட்டதென்பதையே காட்டுகின்றது.

வாரிசு அரசியலை அங்கீகரித்துள்ள அமெரிக்கர்கள் அவமானச் சின்னங்களாக எண்ணியவற்றை தமது முடிகளில் சுமக்கத் தொடங்கியுள்ளனர். தற்போது மீண்டும் புஷ் உள்நாட்டு பொருளாதாரத்தை மட்டுமல்லாது சந்திரன், செவ்வாய் என்றெல்லாம் கதையளக்கத் தொடங்கியுள்ளார். அண்டவெளி தொழில்நுட்பத்தில் மூழ்கியுள்ள ஆட்சியாளர்களும், விஞ்ஞானிகளும் ஆக்கத்துக்குப் பதிலாக அழிவுக்கு அதனை பிரயோகிக்கின்றார்கள். ஆனால் மக்களை ஏதோ வகையில் ஏமாற்றிக்கொண்டு தமது அதிகாரத்தை முடிந்தவரை பிரயோகித்துவிட பார்க்கிறார்கள். புஷ் கூறுவது போல் பார்த்தால் - சந்திரனில் நவீன குடியேற்றவாதத்துக்கு அமெரிக்காவை தயாராக்குகின்ற வேலையில் அது ஈடுபட்டுள்ளதனைக் காட்டுகின்றது. இத்தகைய தேர்தல் வாக்குறுதிகள் - வறிய, பின்தங்கிய அரசுகளின் ஆட்சியாளர்களின் வாக்குறுதிகளைப் போன்றதாகவே உள்ளது. இது கீழைத்தேச, மேலைத்தேச அரசியல் கலாசார வேறுபாடுகளை முதன்மைப்படுத்தும் தலைமைகளுக்கும், அறிஞர்களுக்குமே சமர்ப்பணம். ஏமாற்றுத்தனத்தையும், போலியையும் உலகத்துக்குப் பரப்பிக்கொண்டு யதார்த்தவாதிகளாகத் தம்மைக் காட்டிக்கொள்ள முயல்வதுதான் வேடிக்கையானது.

அமெரிக்க ஜனாதிபதித் தேர்தலில் அதிகமான வாக்குறுதிகள் மிதக்கவிடப்பட்டுள்ளன. அவை கடந்தகாலத்தைப்போல மீண்டும் கைவிடப்படப்போகின்ற அம்சங்களாகவே மாறவுள்ளன. இது அமெரிக்க ஆட்சியாளர்களின் நவீன அரசியல் கலாசாரமாக மாறிவருகின்றது. உலகத்தை ஏமாற்றுவது, ஆதிக்கம் செய்வது என்பதெல்லாம் இனி அமெரிக்க மக்கள் மீதும் பிரயோகிக்கப்படவுள்ளதென்பதையே புஷ்ஷின் நடவடிக்கை காட்டுகிறது. ஏற்கனவே புஷ் அமெரிக்க ஜனநாயகத்தை ஏப்பம்விட்டுவிட்டு ஆட்சியைப் பிடித்தவர். இனியும் அதற்கான வாய்ப்புக்களே அதிகமாகவுள்ளது. இது - இனிவரும் அமெரிக்க ஆட்சியாளர்களுக்குப் பொதுவான அம்சமாகவே அமையும்.

☆

---

## புத்தக கண்ணோட்டம் திரு.த.திரு

# JAFFNA 'ஒரு சுற்றுலா வழிகாட்டி' ஆங்கில் நூல்...






ஆனையிறவு



முறிகண்டிப் பிள்ளையார் கோவில்

**Jaffna'** இன்று உலகளவில் அரசியல் ரீதியாக அடிபடும் பெயர். பல்வேறு வணிகம் **Jaffna** இன் பெயரால் அடிபடுகிறது. சுற்றுலாத்துறையிலும் முதல்நிலையில் உள்ளது. **Jaffna** என்பதை சகலரும் வடபகுதியாகவே கருதுகின்றனர். இது வவுனியா கடந்து வன்னியில் தொடங்கலாம். இலங்கை அரசும் வடபகுதி புனர்வாழ்வு என்கின்றபோது அது யாழ்ப்பாணத்தையே குறிப்பிடுகின்ற தந்திரத்தையும் இங்கு குறிப்பிடவேண்டும்.

இப்பொழுது யாழ்ப்பாணம் **(Jaffna)** அதிகம் அடிபட - தமிழீழ விடுதலைப் புலிகள் ஈட்டிய வெற்றிகளின் பலம்தான் காரணம் என்பது மறுக்கப்படமுடியாது. புலிகளின் வெற்றியின் வெளிப்பாடாகவே, கண்டிவீதி வழி வன்னி - யாழ்ப்பாணம் முக்கியம் பெற்றுள்ளது.

**Jaffna** - இப்படியொரு ஆங்கில நூல் சுற்றுலா வழிகாட்டி நீர்கொழும்பிலிருந்து வெளியாகியுள்ளது.

நீர்கொழும்பிலுள்ள **Viator Publications**- இதனை வெளியிட்டுள்ளது. **The essential guide for Jaffna and its region** என்ற தலைப்பில்தான் இந்த வழிகாட்டிநூல் வந்துள்ளது. இதனை உருவாக்கியவர்கள் ஆங்கிலேயர்கள்.

புத்தகத் தயாரிப்பில் ஈடுபட்டோர் **Phillipe fabry, Lisa fabry Bewley, Alexandra fabry, Emmanuel fabry** என்ற ஒரு ஆங்கிலக் குடும்பமாகும்.

கண்டிவீதி வழி அநுராதபுரம் சிறிலங்கா இராணுவ கஜபா ரெஜிமென்ட் நினைவு கட்டமைப்பில் தொடங்கி - யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவில் முடியும் இவர்களின் பயணத்தில் - சுற்றுலாப் பயணிகள் பார்க்க வேண்டிய இடங்களை இவர்கள் இந்த நூலில் ஆவணப்படுத்தியுள்ளார்கள். ஒவ்வொரு இடமும் வரைபடம்மூலம், புவிநிலைகாட்டி **(G.P.S)** மையம் மூலமும், காட்சியின் வரைபடம் மூலமும் காட்டப்பட்டுள்ளது. காட்சிகள் புகைப்படங்களாக அல்லாது ஓவிய வரைபடங்களாகவே காட்டப்பட்டுள்ளன.

பனை என்ற தமிழனின் அடையாளம், கஜபா நினைவுத்தூபி, வவுனியா அரும்பொருட்காட்சிச்சாலை, மடுக்கந்தை, முறிகண்டிப் பிள்ளையார் கோயில், கிளிநொச்சி மாவீரர் துயிலுமில்லம், ஆனையிறவு, யாழ்.கோட்டை, பொது நூலகம், மணிக்கூட்டுக்கோபுரம், நகைக்கடைத தெரு, வைத்தீஸ்வரன் கோயில், வண்ணை பெருமாள் கோயில், பெருகாரியன் கன்னியர் மடம், சென்.சேவியர் குருமடம், கத்தோலிக்க பெரியகோவில், பழையபூங்கா, நல்லூர், கந்தசாமி கோயில், நல்லூர் செயின்ட் ஜேம்ஸ் தேவாலயம், யமுனா ஏரி, சங்கிலித்தோப்பு, மந்திரிமனை, தொல்பொருட்காட்சிச்சாலை, கருணாகரப் பிள்ளையார் கோவில், வட்டுக் கோட்டை போர்த்துக்கேயர் தேவாலயம், பொனனாலை வரதராஜப்பெருமாள் கோயில், காரைநகர் கசூரினா கடற்கரை, கந்தரோடை, மாவிட்டபுரம், நகுலேஸ்வரம், கீரிமலை, நிலாவரைக் கிணறு, அச்சுவேலி போர்த்துக்கேயர் மாளிகை, பருத்தித்துறை - தெருமூடிமடம், செயின்ட் தோமஸ் தேவாலயம், வெளிச்சவீடு, வல்லிபுரம், மணல்காடு மணல்குவியல், மணல்மூடிய அந்தோனியார் கோயில். ஊர்காவற்துறை - செயின்ட் ஜேம்ஸ் தேவாலயம், ஊரூண்டி கோட்டை, ஹெமன்ஹீல் கடற்கோட்டை, நயினாதீவு அம்மன் கோயில். நெடுந்தீவு - போர்த்துக்கேய கோட்டை, பெருக்கமரம், ஆலமரம், குதிரைகள், குயின்டாக் கோபுரம், காராப்பிட்டி, தொல் மனிதபாதம், தொல்மையம், கச்சதீவு என்ற தலைப்புக்களில் விடயங்கள் இதில் விளக்கப்பட்டுள்ளன.

இந்த நூலில், இடங்களுக்கான விளக்கங்கள் போதாத நிலை காணப்படுகின்றது. ஆய்வு நிலைப்பட்டு தகவல்கள் உறுதிசெய்யப்படாத தன்மை உள்ளது. வரைபடம், **G.P.S** நிலை தவிர ஏனைய தகவல்கள் அநேகமாக வாய்மொழித் தகவல்களை வைத்து எழுதப்பட்டிருப்பதாகவே கருதப்படுகிறது. சொற்பிழைகள் அதிகமுள்ளன. மாவீரர் - மகாவீரர் ஆக மாற்றப்பட்டுள்ளது. தமிழில் குறிப்பிடப்பட்டுள்ள சொற்களில் பிழைகள் உள்ளன.

உண்மையில் இப்படியொரு வழிகாட்டி வடபகுதியுள் வருவோருக்குத் தேவைதான். ஆனால், அது முழுமையானதாக வரவேண்டும். இந்த நூல் ஒரு அவசர தயாரிப்பு என்பது தெரிகிறது. பல சுற்றுலா மையங்கள் தவறவிடப்பட்டுள்ளன. அவை இணைக்கப்பட வேண்டும்.

ஆனால், இந்த நூல் - வடபகுதியின் போரின் காயங்களை ஆங்காங்கு பதிவுசெய்துள்ளது. கலாநிதி க.குணராசா இந்த நூலுக்கு வழங்கிய அறிமுகம் போதாமைகள் நிறைந்ததாக உள்ளது.

நூல் தயாரிப்பாளர்களின் முயற்சி நல்லது.

☆

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

அழிவதூஉம் ஆவதூஉம் ஆகி வழிபயக்கும்
ஊதியமும் சூழ்ந்து செயல்

திருக்குறள்

## நமது நோக்கு

### அதிகரிக்கும் குற்றச்செயல்களின் பின்னணி...

யாழ்.குடாநாடு குற்றச்செயல்களின் மையமாக வருகிறதோ என்ற சந்தேகம் அண்மைக்கால நிகழ்வுகளின்மூலம் வலுப்படத் தொடங்கியுள்ளதானது கவலைதரும் ஒன்றாகியுள்ளது.

அன்றாடம் செய்தித்தாள்களில் வெளிவரும் செய்திகளை உன்னிப்பாகப் பார்க்கும்போது - அதிகரித்துவரும் பல்வேறு வகைப்பட்ட குற்றச்செயல்களின் தன்மைகளும், அதனை மேற்கொள்வோரின் இயல்புகளும் பொதுமக்களின் மத்தியில் பெரும் அச்சத்தையும், குழப்பத்தையும் ஏற்படுத்தியுள்ளமையை உணரக்கூடியதாக உள்ளது.

சில வருடங்களின் முன்னர் அதாவது, யாழ்.குடாநாடு இராணுவக்கட்டுப்பாட்டுக்குள் வரமுன்னர் அவலங்களும், இடர்களும், போர் தந்த வாழ்வியல் துன்பங்களும், அரசு கொடுத்து வந்த பொருண்மிய அழுத்தங்களுக்கிடையிலும் கூட - சமூக விரோதிகள், வன்முறைக்கும்பல்கள், திருடர்கள் என்ற வகையைச்சேர்ந்த எவர் குறித்த அச்சமும், பீதியும் இன்றி மக்கள் கொடும் இடருக்கு மத்தியிலும் நம்பிக்கையுடன் வாழ்ந்த வரலாறு ஒன்றும் இருக்கவே செய்தது.

அப்போதைய மக்களின் பலமெல்லாம் நேரகாலமின்றி, இலக்கின்றி, வெஞ்சினத்துடன், ஏவப்படும் தொலைதூர ஏவுகணைகளும், விமானக்குண்டுவீச்சுக்களும் எப்போ, எங்கே, எவர் மீது விழுந்து தொலைந்து, அவரின் இருப்பை இல்லாதொழித்துவிடும் என்ற அச்சத்திலேயே இருந்தது.

திருடர், கொலை வெறியர், ஏனைய சமூகவிரோதிகள் குறித்த பயப்பீதி மக்களிடம் இருக்கவில்லை. ஆனால், சமூகவிரோதிகள்தான் தம் இருப்புக் குறித்த பயத்துடன் தமது வாழ்நிலையை மாற்றப் போராடிக்கொண்டிருந்தனர்.

அப்போது இம்மண் சிலரின் ஆழமற்ற உணர்வுகள் சூழ்ந்த அறிவுக்கு வெறுமனே மரணங்கள் மலிந்த பூமியாகத் தென்பட்டாலும்கூட, உண்மையில் அந்த மரணங்கள் யாவும் வரலாற்றை படைத்துக்கொண்டிருந்த பூமியாகத்தான் இருந்தது என்பது உண்மையாகும்.

இராணுவக் கட்டுப்பாட்டுக்குள் குடாநாடு வந்தது முதல், புரிந்துணர்வு உடன்பாடு அமுலுக்கு வந்து, யாழ் - கண்டி நெடுஞ்சாலை திறக்கப்படும் வரையான காலப்பகுதிக்குள் அது ஒரு திறந்தவெளிச் சிறைச்சாலையாகவும், சமூகவிரோத செயற்பாட்டு பேர்வழிகளின் மையமாகவும், வன்முறைக் கலாசாரத்தின் நாற்று மேடையாகவும் மாறிவிட்ட துயரத்திற்கு யார் காரணம் என்பதை மக்கள் அறிவர்.

திரும்பிய இடமெல்லாம் மதுபான விடுதிகளும், ஆபாச படங்களைத் திரையிடும் மினி சினிமாக்களும், போதைவஸ்து பாவனையாளர்களும், ஆயுதந்தாங்கிய வன்முறையாளர்களின் பரந்துபட்ட நடமாட்டமும் என இந்தக் காலப்பகுதிக்குள் குடாநாடு தன் இயல்பிருப்பினை இழந்த பூமியாயிருந்தது. இந்த ஏழாண்டு காலம் யாழ்.மண்ணில் விதைக்கப்பட்ட விஷ வித்துக்களில் உருவான நச்சுப்பயிர்களின் தாக்கத்தையே இப்போது குடாநாடு அனுபவிக்கவேண்டியதாகியுள்ளது.

கலாசார சீரழிவு, பண்பாட்டுக் குழம்பல், சமூகவிரோதிகளின் ஆதிக்கம், ஆயுதபாணிகளின் அச்சுறுத்தல் இவையாவும் மக்களுக்கு உளவியல்ரீதியான தாக்கங்களை ஏற்படுத்தியதில் வியப்பில்லை.

இன்றைய குற்றச்செயல்களின் மூலவர்கள் அனைவரும் இத்தகைய உளவியல் கோளாறுகளுக்குள்ளானவர்கள்தான் என்பதில் இருவேறு கருத்துக்கிடையாது.

இந்த உளவியல் கோளாறு இன்றைய இளைய சமூகத்தவர் மத்தியில் ஒரு மிகமோசமான தொற்றுவியாதியாக மாறிவிட்டுள்ளதன் எதிரொலிதான் இன்றைய குற்றச்செயல்களின் அதிகரிப்பாகும்.

சமூகப் பிரக்ஞையும், சுயமனோபல ஆளுமையும், பகுத்தறிவாற்றலும் உள்ள எந்த இளைஞனும் - மனிதனும் சமூக விரோதியாக தன்னை இனங்காட்டமுயலும் செயற்பாடுகளில் ஈடுபடமாட்டான் என்பது சர்வநிச்சயமாகும்.

எனவே, இன்றைய குற்றச்செயல்களுக்குக் காரணமானவர்கள் என இனங்காணப்பட்டுள்ளோர் அனைவரும் உளவியல் குறைபாடுகளுக்குள்ளானோர் என்பதில் சந்தேகமில்லை.

இதனை உளவியல் ஆய்வாளர்களும் ஓரளவுக்கு உறுதிப்படுத்தவே செய்துள்ளனர். இந்தக் குற்றச்செயல்கள் அதிகரிப்பின் பின்னால் ஒரு வகையிலான அரசியல் காரணங்களும் இருக்கவே செய்கின்றன. அரசியல் மற்றும் சமூகரீதியில் விழிப்புணர்வுகொண்ட, விடுதலையுணர்வுமிக்க, போராட்ட மனோபாவம்கொண்ட இனமாகத் தமிழ்மக்களின் இளைய தலைமுறையினர் இருக்கவேகூடாது என்பதில் அக்கறைகொண்ட தமிழினவிரோதசக்திகள் மேற்கொண்ட நன்று திட்டமிட்ட உளவியல் ஊடுருவல் நடவடிக்கையின் விளைவே இத்தகைய குற்றவாளிகளின் தோற்றமாகும்.

இது ஒன்றும் அசாதாரணமான கற்பனைக் கருத்தேயல்ல...

சூழலின் யதார்த்தத்தை உணர்வோர் இதனை நன்கு புரிந்துகொள்ளமுடியும். இன்றைய குற்றச்செயல்களுக்கான புறக்கணிக்கமுடியாத காரணங்களில் இது முக்கியமானதாகும்.

இதனை முற்றாகக் களையவேண்டியது காலத்தின் அவசியமாகும். எனினும், அதற்கு கையாளவேண்டிய வழிமுறைகள் நுட்பமாக ஆராயப்பட்டே மேற்கொள்ளவேண்டும் என்பது அதைவிட அவசியமாகும்.

அதனைப் பொறுப்பெடுத்து செய்யவேண்டியவர்கள் இதனை உணர்வது முக்கியமாகும்.

## நாடும் நடப்பும்




# புலிகளை ஓரங்கட்டும் நோக்கில் இந்திய அரசு செயற்படக்கூடாது!

## தொழிலாளர் தேசிய சங்கத் தலைவர் கந்தசாமி

அதிகாரப் பரவலாக்கத்தைத் தவிர்த்து, மீண்டும் ஒற்றையாட்சிமுறை ஒன்றினைக் கொண்டுவரவுள்ளதாக சோமவன்ச அமரசிங்க தெரிவித்துள்ள கருத்து, இலங்கைத்தீவின் எதிர்காலத்துக்குப் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளதாகத் தொழிலாளர் தேசிய சங்கத்தின் செயலாளர் ஏ.கந்தசாமி தெரிவித்தார்.

மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்காவின் செயற்பாடுகள் தொடர்பாகக் கருத்து தெரிவிக்கையிலேயே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் -

ஒற்றையாட்சியை நிலைநாட்ட முயன்ற ஐக்கிய தேசிய கட்சி, இன்று அதிகாரப் பரவலாக்கத்தை ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தநிலையில், சோமவன்ச அதிகாரப் பரவலாக்கத்தைத் தவிர்த்து, ஒற்றையாடசி முறையினை மீண்டும் கொண்டு வருவதன்மூலம் நாட்டுமக்களுக்குச் சமாதானம் கிடைக்கப் போவதில்லை.

அதிகாரம் ஒன்றைக் குறிக்கோளாகக் கொண்டே, சிறிலங்கா சுதந்திரக்கட்சி பேரினவாதிகளின் வலைக்குள் வீழ்ந்துள்ளது. இந்தியாவை நம்பி மக்கள் விடுதலை முன்னணி ஜனாதிபதியுடன் ஒப்பந்தம் செய்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையில் தமிழ் தேசிய இனத்தின் கலாசாரத்தினை, பேரினவாத சக்திகள் சிதைத்ததனால்தான், இலங்கைத்தீவுக்குள் ஆயுதப்புரட்சி வெடித்தது. இந்த நிலையில் இந்தியா - இலங்கை விடயத்தில் எந்தக் காரணம் கொண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளை ஓரங்கட்டும் நோக்கில் செயற்படக்கூடாது.

தமிழ்மக்கள் மத்தியிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளை தனிமைப்படுத்தமுடியாது. இதனை இந்தியா நன்கு புரிந்துகொள்ளவேண்டும். புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியை இந்தியா ஆதரிப்பதன்மூலம், இலங்கையில் பிராந்தியங்களுக்கிடையில் முரண்பாடுகளை தோற்றுவித்தது எனவும் அவர் கருத்து தெரிவித்தார். (01)

## சேதமுற்ற வீடுகளைப் புனரமைப்பது குறித்த

# திட்டங்களைத் தயாரிப்பதற்காக உலகவங்கிக்குழு வருகிறது!

வடக்கு - கிழக்கில் போரினால் சேதமுற்ற வீடுகளைப் புனரமைப்பது குறித்து, திட்டங்களைத் தயாரிப்பதற்காக உலக வங்கி அதிகாரிகள் குழுவொன்று இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளதாகத் தெரியவருகிறது.

வடக்கு - கிழக்குப் பகுதிகளில் கடந்தகாலங்களில் இடம்பெற்ற போரினால் மூன்று இலட்சத்து 25 ஆயிரம் வீடுகள் சேதமடைந்திருக்கின்றன. இந்த வீடுகளைப் புனரமைப்பது தொடர்பான திட்டங்களைத் தயாரிப்பதற்கே உலகவங்கி அதிகாரிகள்குழு - இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளது.

உலக வங்கியின் முன்னணி நிதி நிறுவனமான சர்வதேச அபிவிருத்தி ஏஜென்சி, இந்த வீடமைப்பு உதவிகளுக்காக உடனடியாக 155 மில்லியன் டொலரை வழங்கத்தயாராக இருக்கின்றது.

சர்வதேச அபிவிருத்திக்கான ஏஜென்சி - இலங்கையின் வீடமைப்பு, புனர்நிர்மாணம் மற்றும் வீடுகள் திருத்தம் போன்றவற்றுக்கு இலகுவானமுறையில் உதவிகள் வழங்கும் திட்டத்துக்கு உதவும்படி அரசாங்கம் கேட்டிருக்கிறது. வீடுகளை இழந்த ஒவ்வொரு குடும்பத்துக்கும் வீடுகளை அமைத்து, அவற்றைப் புனரமைத்துக் கொடுப்பதற்கு ஏற்றவாறு உதவிகளை வழங்க வேண்டியது அவசியம் என அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதனால், இந்தத் திட்டங்களுக்கு உதவுவது தொடர்பாக ஆய்வுநடத்தி, திட்டங்களை வகுக்கும் நோக்குடன் உலக வங்கி அதிகாரிகள்குழு இலங்கைக்கு வரவுள்ளது. மாகாண மட்டத்தில் இந்தக் குழுவினர் பயிற்சிப்பட்டறைகளை நடத்த விருப்பதுடன், உதவிப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் சர்வதேச நிறுவனங்களுடன் இணைந்து திட்டங்களை வகுக்கவும் உள்ளனர்.

# சோமவன்சவைச் சந்திப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா மறுப்பு!

நாடு திரும்பியுள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்கவைச் சந்திப்பதற்கு எடுத்த முயற்சிகளை ஜனாதிபதி சந்திரிகா நிராகரித்ததாகக் கூறப்படுகின்றது.

ஜனாதிபதியைச் சந்திப்பதற்கான ஏற்பாடுகளைத் தான் செய்து தருவதாகக் கடந்த அரசாங்கத்தின் முன்னாள் அமைசசர் ஒருவர் சோமவன்சவுக்குத் தெரிவித்திருந்தார்.

ஆனால், மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - ஜனாதிபதியை சந்தித்து விசேட கலந்துரையாடல் ஒன்றினை நடத்தவிருப்பதாகவும், அந்தக் கலந்துரையாடலினை மேற்கொள்வதற்கு நேரத்தினையும் ஒதுக்கித்தருமாறு கேட்கப்பட்டபோதே, ஜனாதிபதி இதற்கு மறுப்புத் தெரிவித்துள்ளார். மக்கள் விடுதலை முன்னணியுடனான சந்திப்பினை ஜனாதிபதி மறுத்தமைக்கான உடனடிக்காரணம் எதுவும் கண்டறியப்படவில்லை.

ஆனால், சிறிலங்கா சுதந்திரகட்சிக்கும், மக்கள் விடுதலை முன்னணிக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்குப் பின்னர், எதிர்வரும் 29 ஆம் திகதி நடைபெறவுள்ள ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணியின் முதலாவது பொதுக்கூட்டத்தில் உரையாற்றும் விடயம் குறித்தே ஜே.வி.பியின் தலைவர் சோமவன்ச அமரசிங்க - ஜனாதிபதியுடன் கலந்துரையாடவிருப்பதாகத் தெரியவருகின்றது.

இப்பொதுக் கூட்டங்கள் நாடளாவியரீதியிலுள்ள பிரதான நகரங்களில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இரு கட்சிகளுக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டுள்ள கூட்டமைப்பு குறித்தும், எதிர்காலத்தில் எவ்வாறானவேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பது தொடர்பாகவும், எதிர்காலத்தில் ஐக்கிய மக்கள் விடுதலை முன்னணி அரசியல் நடவடிக்கைகள் குறித்தும் பேசப்படவிருப்பதாகத் தெரியவருகின்றது.

மக்கள் விடுதலை முன்னணி பொதுக்கூட்டங்களில் சோமவன்ச அமரசிங்க பங்குபற்றுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை, அவருக்கு எவ்வாறான பாதுகாப்புகள் வழங்கப்படவேண்டும் என்பது குறித்தும் பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்த பரீட்சார்த்த பாதுகாப்பு நடவடிக்கையினை ஜே.வி.பி. யினைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் வழிநடத்தலின் கீழ் செய்யப்பட்டு வருவதாகவும், பாதுகாப்பினை மேற்கொள்வதற்கு என விசேட பயிற்சிகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

## செய்திக் கட்டுரை

கி.கமலதாஸ்

# கல்வியில் பலவகையிலும் ஒதுக்கப்படும் தமிழ் மாணவர்களின் எதிர்காலம்?

தமிழ் இனத்தில் எந்த ஒரு சமூகத்தை எடுத்துப் பார்த்தாலும் அதில் அடக்கல்களும் சுரண்டல்களும் தொடர்கதையாக நிலவிவருவது யாவரும் அறிந்த விடயம். அந்த வகையில் இலவசக்கல்வி என்ற போர்வையில் அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் கல்வியிலும் அதுசார்ந்தசெயற்பாடுகளிலும் தமிழ்ச்சமூகம் புறக்கணித்து சுரணடப்படுவது வேதனைக்குரியவிடயம் ஆகும்.

கல்வியே தமது கண்கள் என்று செயற்படும் நமது சமூகம் யுத்தத்தின் கொடுமைகளான அழிவுகள், இழப்புக்கள், இடப்பெயர்வுகள் என்று எத்தனையோ துன்பங்கள் அவர்களை துரத்திக்கொண்டு வந்த போதும் அதில் இருந்து தப்பித்து கல்வியை தொடர்ந்து கற்று



அதன் மூலம் தேசியரீதியிலும், சர்வதேசரீதியிலும் பல சாதனைகள் புரிந்து வருவது பாராட்டத்தக்க விடயம் ஆகும்.

நமது கல்விச் சமூகத்தில் அடக்கல்கள் சுரண்டல்கள் என்ற ரீதியில் முதன்மை பெறுவது மாணவர்களுக்கான கல்வியைப் போதிப்பதற்கு போதியளவு ஆசிரியர்கள் இன்மையாகும். வடக்கு கிழக்கு தமிழ்ப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளை எடுத்து நோக்கும் போது பத்தாயிரத்துக்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தேவையாக இருப்பதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. ஆனால், மறுபுறம் சிங்களப் பிரதேசத்தில் பதினையாயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்கள் தேவைக்கதிமாக பணியாற்ற வைத்து அவர்களின் கல்வியை மேம்படுத்த முனைந்து கொண்டிருக்கும் இன்றைய அரசாங்கங்கள், அமைச்சுக்கள், தமிழ் மாணவர்களின் கல்வியைப் போதிப்பதற்கு தேவையான ஆசிரியர்கள் நியமிக்காது இருப்பது எந்த வகை நீதி? அதுபற்றி பலதரப்பட்ட வர்க்கத்தினரிடமும் நீதி கேட்டுக்கொண்டிருக்கும் தமிழ் ஆசிரியர் சங்கத்திற்கு எப்போது சாதகமான பதில் கிடைக்கப் போகிறது என்பது வியப்பாகவே உள்ளது.

இவ்வாறு இந்த ஆசிரியர்களின் வெற்றிடங்கள் நிரப்பப்படாது இருப்பதன மூலம் இந்த ஆசிரியர் சமூகம் கடினமாக உழைக்க வேண்டியதும் கணிப்பீடு, மதிப்பீடு, உணவு தயாரிப்பு, செயற்திட்டம் எனப் பல்வேறு வகையான சுமைக்குள்ளும் தள்ளப்படுகிறார்கள். ஆசிரியத் தொழில் என்பது இப்போது வாண்மை என்பதைவிட மனஅலைச்சல், மனஇறுக்கம், இரத்த அழுத்தம், போன்ற நோய்களுக்கு வழி நடத்தும் நோய்க்காவி ஆகிவிட்டது. கற்பித்தலிலும் பார்க்க வெற்றுப் படிவங்களை பூர்த்தி செய்ய வேண்டியதே பிரதான பணியாக திகழ்ந்து வருகின்ற போதிலும் அவர்கள் மாணவர்களின் வளர்ச்சியில் அக்கறை செலுத்தி வருவது போற்றுதற்குரிய விடயம் ஆகும்.

யுத்த காலப்பகுதியில் விமானக்குண்டு வீச்சுக்கள், ஷெல் வீச்சுகள் போன்ற பல போரியல் நடவடிக்கைகளால் பல பாடசாலைகளின் கட்டடங்கள், தளபாடங்கள், போன்ற பல பௌதீக வளங்களை சிங்களப் படையினர் அழித்தும் சிதைத்தும் உள்ளனர் என்றால் அதை எவராலும் மறுத்துரைக்க முடியாது. அதனால் நமது மாணவர்கள் மழை, வெயில், போன்ற இயற்கையின் கொடுமைகளை சகித்துக் கொண்டு மரநிழலிலும், வெறும் மண்தரைகளிலும் கல்வியைக் கற்றுவருவது மட்டுமல்லாது பல தமிழ்மக்களின் உயிர்களைக் கொன்று குவித்த ஷெல் குழாய்கள், ஷெல் பெட்டிகள், போன்றவற்றையே தமது இருக்கைத் தளபாடமாகப் பயன்படுத்தி கல்வி கற்பது என்பது சாதாரண விடயம் அல்ல. இந்த அவலமான நிலைமைகளை அவதானித்த சில உதவிபுரியும் யுனிசெவ், U.N.H.C.R, G.T.Z போனற பல பொது அமைப்புகளின் சேவைகள் குறிப்பிடத்தக்கது.



ஆனால், கல்வி அமைச்சோ அது சார்ந்த பிரிவினரோ இதற்கான தீர்வுக்கு இழுத்தடிப்பது எந்த வகைக்குப் பொருத்தமானது?

அடுத்து சிங்களப் படைகள் கல்விச் சமூகத்துக்கு இளைத்துவரும் கொடுமை உயர் பாதுகாப்புவலயம் என்ற கொச்சை வார்த்தைகளைப் பேசிக்கொண்டு பாடசாலைகளுக்கு சொந்தமான காணிகள், கடடடங்கள், மைதானங்களில் அவர்கள் காவல் அரண்கள், இருப்பிடங்களை அமைத்து வாழ்ந்து வருவதுடன், பாடசாலைகளின் பௌதிக வளஙகளையும் சுரண்டிவருகின்றமையாகும். இது இப்படிப்பட்ட இராணுவ வலயத்தில் உள்ள பாடசாலைகளில் கல்விபயிலும் மாணவர்கள் தீவிர சோதனைகளின் பின்பு பாடசாலைக்குள் நுழையவிடுதல், பாஸ்முறைகள் மூலம் நுழையவிடுதல், போன்ற கொடூர செயற்பாடுகளும் மாணவர்களை வெருட்டுதல் தகாத வார்த்தைகளால் பேசுதல் போன்றவற்றையும் செய்து வருவதால் மாணவர்கள் உடலியல், உளவி யல் ரீதியாகவும் பாதிப்புக்கு உள்ளாகின்றனர். இந்த நிலைமைகள் பற்றி இராணுவத் தரப்பிடம் கேட்டபோது சாதகமான பதிலை தந்திருக்கின்ற போதிலும் தீர்வுகள் கிடைக்கும் என்பது சந்தேகம் ஆகவே உள்ளது.

இவ்வாறாக அடக்கப்பட்டுவரும் தமிழ் கல்விச் சமூகத்துக்கு தேவையான பாடநூல்கள், இலவச சீருடைகள் கல்வி உபகரணங்கள் போன்றவற்றை அரசாங்கம் தேவையான காலத்தில் வழங்காது தேவைபூர்த்தியடையும் காலத்தில் வழங்குவதையும் அவதானிக்க முடிகின்றது. அதாவது முதலாம் தவணை தொடக்கத்தில் மாணவர்களின் கைகளில் கிடைக்க வேண்டிய இலவச பாடநூல்கள் இரண்டோ அல்லது பல மாதங்களின் பின்போ வழங்குவது போன்ற பின்னடிப்பு செயற்பாடுகளால் மாணவர்கள் பெரும் சிரமத்திற்கு உளளாகுவதோடு நில்லாது ஆசிரியர்களும் கற்பித்தலில் பெரும் சிரமங்கலை எதிர்நோக்குகின்றனர்.

சமாதானச் சூழலில் தேசிய ரீதியில் இடம் பெறும் தமிழ்ப் போட்டியாளர்கள் பல வெற்றிகளையும் சாதனைகளையும் பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது. குறிப்பாக விளையாட்டுத் துறையை எடுத்துப்பார்த்தால் தழிழ் மாணவர்கள் அது தொடர்பான பயிற்சிகளை திறம்பட செய்வதற்கு தேவையான மைதானங்களோ, உபகரணங்களோ, பயிற்றுவிப்பாளர்களோ இல்லை. ஆனால் தென்இலங்கை பாடசாலைகளில் அனைத்து விளையாட்டுக்களுக்கும் தனித்தனி மைதானங்களும், தனித்தனி பயிற்றுவிப்பாளர்களையும் உருவாக்கிகொடுத்தும் - கொடுத்துக்கொண்டிருப்பதன் மூலமும் தமிழ் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகின்றது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை பெறுபேறு மூலம் பல்கலைக் கழகத்துக்கு தெரிவு செய்யப்படும் முறைகளிலும் தமிழ் மாணவர்கள் சுரண்டப்படுகிறார்கள். பல்கலைக் கழகங்களின் வெற்றிடத்திற்கு குறைவாக மாணவர்கள் தெரிவு செய்யப்படுவது, மாவட்டக் கோட்டா முறைக்கு குறைந்தளவான அதாவது வழமைக்கு மாறாக மாணவர்களைத் தெரிவுசெய்தல் போன்றவற்றிலும் தமிழ் மாணவர்கள் சுரண்டப்படுவதும் ஒரு அடக்கல் என்ற வகைக்கே தள்ளி விடுகின்றது.

மொத்தத்தில் நாளைய உலகத்தை கட்டியெழுப்பும் இன்றைய வளரும் பயிர்களை அடக்குவதும் சுரண்டுவதும் எந்த வகையிலும் நியாயமாகாது எனவே இந்த இளைய சமூகத்தை அடக்குவதையும் சுரண்டுவதையும் விட்டு அவர்களின் நலன்களை கருத்திற்கொண்டு செயற்படுவதற்கு அனைவரும் ஒன்று சேர்ந்து உழைப்போமாக.

## நாடெங்கே போகிறது



மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் இடையில் முடிச்சுப் போடுகிற விடயமாகத்தான் இது இருக்கிறது.

தங்களது நாட்டைச் சம்பந்தப்படுத்துவதோடு அடுத்த நாட்டையும் வேண்டுமென்று வில்லங்கத்துக்குள் தள்ளிச் சிக்கல்களைத் தோற்றுவித்து குளிர்காய நினைப்பது ஒரு சில தென்பகுதிப் பத்திரிகைகளின் நிலைப்பாடாக உள்ளது.

நோர்வேயின் புலனாய்வு இலங்கையை மட்டுமல்ல இந்தியாவையும் பாதிக்கக் கூடும் என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

இதற்கு நோர்வேயின் யுத்தநிறுத்த கண்காணிப்பாளர்களாக கடமையாற்றிய புறூவ் ஹொவ்டே, ரெலவ்ப்சன் ஆகிய இருவரும் நோர்வேயின் புலனாய்வுப் பிரிவில் சம்பந்தப்பட்டவர்களாம்.

ஹொவ்டே 2000 ஆம் ஆண்டு எவ்வித இரத்ததுளியும் சிந்தாமல் விடுதலைப் புலிகளை யாழ்ப்பாணம் அழைத்து வந்தவர் என்றும் யாழ்ப்பாணத்தில் பல காவலரண்களை அகற்றுவதற்கும் விடுதலைப் புலிகள் பலம் பெறுவதற்கும் காரணகர்த்தா எனவும் அந்தப் பத்திரிகையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

முன்பு போர்நிறுத்த கண்காணிப்புக் குழுத்தலைவராக கடமையாற்றிவிட்டு வேண்டாம் என்று சென்றவர் மீண்டும் ஏன் வருகிறார் என கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

நோர்வேயின் புலனாய்வு நடவடிககையை உண்மைப்படுத்தும் நோக்கமாக பின்வரும் கருத்துக்களையும் அந்தப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

2003 ஆம் ஆண்டு நோர்வேயின் ஆயுத விற்பனையைச் சுட்டிக்காட்டி உள்ளது.

2003 ஆம் ஆண்டு நோர்வே 1.9 மில்லியனுக்கு யுத்த தளபாடங்களை சில நாடுகளுக்கு விற்பனை செய்துள்ளது. யுத்த ஆயுதங்கள் மாத்திரமன்றி யுத்த உபகரணங்களும் விற்றுள்ளதால் நோர்வேக்கு 2.4 மில்லியன் யூரோ இலாபமாகப் பெற்றுள்ளது.

இந்த ஆயுதங்கள் தான்சானியா, கொங் கொங், சிங்கப்பூர், மலேசியா, தென்ஆபிரிக்கா, தாய்லாந்து, ஐக்கிய எமிரேட்டு குடியரசு ஆகிய நாடுகளுக்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

2002 ஆம் ஆண்டு இஸ்ரேலுக்கு நோர்வே ஆயுதங்களை விற்பனை செய்துள்ளது என்று அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவைச் சாடியுள்ள அந்தப்பத்திரிகை இலங்கை தேசிய புலனாய்வுப் பிரிவையும் சாடியுள்ளது.

அவுஸ்ரேலியாவில் இருந்து தீவிரவாதத்திற்கு ஆதரவான ஒரு தமிழர் இலங்கை வந்துள்ளார். அவர் யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, அம்பாறை, வவுனியா, மன்னார் ஆகிய பிரதேசங்களுக்குச் சென்றுள்ளார். இவர் வந்து போனபோது இலங்கை புலனாய்வுப் பிரிவு கண்மூடிக் கொண்டிருந்ததா என்று அந்தப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

விடுதலைப்புலிகள் இயக்கம் இலங்கையில் பயங்கரவாத தடைச் சட்டத்தில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளது என்று அந்தப் பத்திரிகைக்குத் தெரியாதா?

நாடு பற்றி எரியும் போது நீரோ மன்னன் வீணை வாசித்தது போன்று தான் இந்தப் பத்திரிகைகளின் கொள்கைகளும் கோட்பாடுகளும் என்பது யாருக்குத் தெரியும்?

மகரம்

# மனித உரிமை அலுவர்களுக்கு மூன்று நாள் பயிற்சிப் பட்டறை!

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்குப் பிரதேசங்களில் செயற்பட்டுவரும் மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலர்களுக்கான மூன்று நாள் பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதில் வடக்கு - கிழக்கு பகுதிகளில் இயங்கும் மனித உரிமை ஆணைக்குழு அலுவலகங்களில் பணிபுரியும் இணைப்பாளர்கள், விசாரணை அதிகாரிகள் திட்டமிடல் அதிகாரிகள் பங்குபற்றினர்.

யாழ் கண்டிவீதியில் இயங்கும் வில்லியம் மண்டபத்தில் இந்த பயிற்சிப் பட்டறையில் சுமார் 20 பேர்வரையில் கலந்து கொண்டனர்.

காலை 9 மணிமுதல் பிற்பகல் 5 மணிவரை இந்தப் பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இங்கு வாய்மொழியற்ற தொடர்பாடல் இணக்கப்படின் அவசியம், உரிமைகளின் பாதுகாப்பு முதலான பல விடயங்கள் குறித்து மனித உரிமை அறிவியலாளர்கள் விளக்கமளித்தனர். (ப)

# சட்டவிரோத மதுபானநிலையம் மட்டக்களப்பில் முற்றுகை!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு சந்திவெளிப்பகுதியில் சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்டுவந்த மதுபான நிலையம் ஒன்று பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டது.

இந்த மதுபான நிலையம் கடந்த ஐந்து ஆண்டுகளாக அப்பகுதியில் செயற்பட்டுவருகின்றது. இது தொடர்பாக மட்டக்களப்பு பொலிசாருக்கு கிடைத்த தகவலை அடுத்தே அவர்கள் அதனைமுற்றுகையிட்டுள்ளார்கள்.

அங்கிருந்து 600 லீட்டர் மதுபானம் கைப்பற்றப்பட்டதுடன் இருபது வயதுடைய வாலிபர் உட்பட இருவர் கைது செய்யப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்த மதுபான நிலையம் தொடர்பான பூரண விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகத் தெரியவருகிறது.

# செவ்வாய் கிரகத்தின் மத்திய பகுதியில் 'ஒப்பச்சூனிட்டி' வெற்றிகர தரையிறக்கம்




'ஒப்பச்சூனிட்டி' எனப் பெயரிடப்பட்ட இரண்டாவது ரோவர் கலம் செவ்வாய் கிரகத்தில் தரையிறங்கியுள்ளது.

இந்தக் கலம் - செவ்வாய் கிரகத்தில் நீர் உள்ளதா என ஆராயவதற்கு நாஸாவினால் அனுப்பப்பட்டது.

ஜனவரி 4 ஆம் திகதி செவ்வாயில் 'ஸ்பிரிட்' கலம் தரையிறங்கிய பிரதேசத்துக்கு எதிர்புறத்தில் உள்ள உயர்ந்த, தட்டையான பிரதேசத்தில் அது தரையிறங்கியுள்ளது.

நாஸாவின் கலமொன்று உயரமான பிரதேசத்தில் தரையிறங்கியது இதுவே முதல் முறையாகும்

முன்னர் தரையிறங்கிய 'ஸ்பிரிட்' கலம் கடந்த புதன்கிழமை தொடக்கம் பூமியுடனான தொடர்புகளைத் துண்டித்துள்ளது. சமிக்ஞைகள் மூலம் இந்தக் கலம் தரையிறங்கிய செய்தி கிடைத்ததும் நாஸா விஞ்ஞானிகள் ஒருவரையொருவர் தழுவி தமது உற்சாகத்தை வெளிப்படுத்தினர்.

செவ்வாயில் கலம் தரையிறங்கிய செய்தி கிடைத்ததும் கலிபோர்னியாவின் ஆளுநர் 'ஸ்வாக்ஸ்நேகர்' தரைக் கட்டுப்பாட்டாளர்களை வரவேற்றிருந்தார்.

கலம் தரையிறங்கியபின் 20 நிமிடங்கள் வரை ரேடியோச் சமிக்ஞைகளில் ஏற்ற இறக்கம் காணப்பட்டதாகவும், இதனால், கட்டுப்பாட்டாளர்கள் 'ரோவர்' நிலைகுலைந்த நிலையில் தரையிறங்கியிருக்கலாம் எனவும் கருதினார்கள்.

ஆனால், 'ரோவரின்' அன்ரனா செவ்வாயின் தரையை நோக்கிச் சரிந்திருந்ததால், ரேடியோ அலைகள் தரையில் மோதியபின் தெறித்ததால் அந்த விளைவு ஏற்பட்டதாகத் தற்பொழுது தெரிவிக்கப்படுகிறது.




'ஒப்பச்சூனிட்டி' கலம் மணித்தியாலத்திற்கு 19,000 கிலோமீற்றர் வேகத்தில் செவ்வாயை நோக்கிச் சென்றதால், தரையில் பலமாக மோதாமல் இருப்பதற்குப் பரசூட்டும், காற்றடைத்த பைகளும் உதவி புரிந்தன. மேலும், ரொக்கட்டுக்கள் செவ்வாயின் ஈர்ப்பிற்கு எதிராக செயற்பட்டு மென்மையான தரையிறக்கத்திற்கு உதவி புரிந்துள்ளன.

'ஒப்பச்சூனிட்டி' செவ்வாயின் மத்திய கோட்டிற்கு அருகில் அமைந்துள்ள 'மெரீடியனி பிலானம்' என்ற இடத்தில் தரையிறங்கியுள்ளது. இந்த இடம் இருண்ட கரிய அல்லது சாம்பல் நிறமுடையதாக அமைந்திருக்கலாம் எனக் கருதப்படுகிறது. இந்த இடத்தில் கனிய வளங்களும் இருக்கலாம் எனவும் கருதப்படுகிறது.

# புலத்த பாதுகாப்பு ஏற்பாட்டிற்கு மத்தியில் இந்திய குடியரசுத் தின கொண்டாட்டம்!

## செங்கோட்டை பகுதி சீல் வைப்பு

இந்தியாவின் குடியரசுத் தினமான இன்று, தீவிரவாதிகள் நாசகாரச் செயல்களில் ஈடுபடுவதைத் தடுக்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய அரசு அறிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் குடியரசுத்தினம் கொண்டாடப்படும் வேளையில், கொண்டாட்டத்தை சீர்குலைக்கும் நோக்குடன் தீவிரவாதிகள் வன்செயல்களில் ஈடுபடலாம் என்றும், இந்தியாவிலிருந்து புறப்படும் விமானங்களைக் கடத்தி நாசவேலைகளில் ஈடுபடக்கூடும் என்றும் புலனாய்வுப் பிரிவினர் ஏற்கனவே எச்சரித்துள்ளனர். இதனால், நாடு முழுவதும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

டெல்கியில் செங்கோட்டை உட்பட முக்கிய இடங்கள் 'சீல்' வைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தலைநகர் டெல்கி, காஷ்மீர் மற்றும் வட கிழக்கு மாநிலங்களில் தீவிரவாதிகள் தமது கைவரிசையைக் காட்டக்கூடும் என்று அஞ்சப்படுவதால் அங்கு பாதுகாப்புப் படையினர் உஷார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர்.

தலைநகர் புதுடெல்கியில் பிரமாண்டமான கண்கவர் அணிவகுப்பும், அதனைத் தொடர்ந்து ராஜ்பாத்தில் குடியரசுத்தின ஊர்வலம் நடைபெறும். ஜனாதிபதி அப்துல்கலாம், பிரதமர் வாஜ்பாய், துணைப்பிரதமர் அத்வானி மற்றும் பல தலைவர்கள் இதில் கலந்துகொள்வர்.

# பத்து ஆண்டுகளின் பின் லிபியாவில் அமெரிக்க விமானம் தரையிறக்கம்!

கேணல் கடாபி - லிபியாவின் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் முதன்முறையாக, அமெரிக்கக் காங்கிரஸின் குழுவொன்று அந்த நாட்டுக்கு விஜயம் செய்துள்ளது. இந்தத் தூதுக்குழுவில் ஜனநாயக குடியரசுக் கட்சியைச் சேர்ந்த அறுவர் அடங்கியுள்ளனர்.

இவர்கள் அரசியல் தலைவர்கள் மற்றும் வர்த்தகப் பிரமுகர்களுடன் கலந்துரையாடுவதற்குத் திட்டமிட்டுள்ளனர். சந்தர்ப்பம் கிடைத்தால் ஜனாதிபதி கடாபியையும் சந்திப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

லிபியாவின் 'திரிப்போலி' விமான நிலையத்தில் பத்து ஆண்டுகளுக்குப் பின் முதல் முறையாக அமெரிக்க வான்படை விமானம் தரையிறங்கியுள்ளது.

தடைசெய்யப்பட்ட ஆயுதங்களை உற்பத்தி செய்வதில்லை என அண்மையில் லிபியா அறிவித்திருந்ததன் பின்னரே மேற்கு நாடுகளுக்கும் லிபியாவுக்கும் இடையில் உறவுகள் வலுவடைந்துள்ளன.

அமெரிக்காவுடனான உறவுகளை விரைவாக வலுப்படுத்திக் கொள்வதற்கு லிபியா முற்பட்டவேளையிலும், லிபியா மீதான பொருளாதாரத் தடைகளை நீக்குவதற்கு அமெரிக்கா இதுவரை முன்வரவில்லை என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நீண்ட காலமாக அமெரிக்காவினால் புறக்கணிக்கப்பட்டு வந்த லிபியாவில், அமெரிக்க அரசின் அங்கத்தவர்களின் பிரவேசம் இரு நாடுகளிடையே ஏற்பட்டுவரும் முன்னேற்றத்தின் வெளிப்பாடாகும் என பி.பி.ஸியின் செய்தியாளரான 'உசேர்' தெரிவித்துள்ளார்.

# ஈராக்கின் மீது தொடுக்கப்பட்ட போரினால் அமெரிக்க அதிகாரிகளிடையே முரண்பாடு

## பிளேயரின் பதவிக்கு ஆபத்து

அமெரிக்கா - சென்ற ஆண்டு ஈராக்கின் மீது போர் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு முன்னரே அந்த நாட்டில் பேராபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்கள் எவையும் இல்லாதிருந்திருக்கலாம் என அமெரிக்காவின் இராஜாங்க அமைச்சர் 'கொலின் பவல்'' தெரிவித்துள்ளார்.

முன்னர் ஈராக்கில் ஆயுதப் பரிசோதனைகளில் ஈடுபட்டிருந்த 'டேவிட்கே' - பேராபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் எவையும் ஈராக்கில் இருந்ததாக தான் கருதவில்லை, என அண்மையில் தெரிவித்த கருத்துக்களின் பின்னர் 'கொலின் பவல்' மேற்குறிப்பிடட்ட கருத்தினைத் தெரிவித்திருந்தார்.

ஆனால், ஒரு ஆண்டுக்கு முன்னர் இதே 'கொலின் பவல்' ஈராக்கில் உள்ள பேராபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்களால் ஏற்படக்கூடிய ஆபத்துக்கள் தொடர்பாக, ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு அமைச்சருக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார். அது மட்டுமல்லாமல் பேராபத்தை விளைவிக்கக்கூடிய ஆயுதங்களை - சதாம் ஹுசைன் இரகசியமாகச் சேர்த்துள்ளதாகத் தொடர்ந்தும் தெரிவித்து வந்ததுடன் 100 தொடக்கம் 500 தொன் வரையான இரசாயன ஆயுதங்கள் சதாம் பதுக்கி வைத்திருப்பதாகவும் அவர் தெரிவித்து வந்துள்ளார்.

அண்மையில் இது தொடர்பாக அவரிடம் கேட்டபோது இதுவரை தங்களுக்குத் தெரியாதெனக் குறிப்பிட்டிருந்தார். டேவிற்கேயின் கருத்துக்களை மேற்கோள்காட்டி வினவியபோது, ஈராக்கில் ஆயுதப் பரிசோதனைக்கு நியமிக்கப்பட்டுள்ள பரிசோதகர்கள் தான் அங்கு பேராபத்தை விளைவிக்கும் ஆயுதங்கள் உண்டா? இல்லையா? என்பதைத் தீர்மானிக்க வேண்டும் என்று கூறியதுடன் அவ்வாறான ஆயுதங்கள் இருந்திருந்தால் அவற்றிற்கு என்ன நடந்தது? என அவரே கேள்வி எழுப்பியிருந்தார்.

முன்னர் தெரிவித்த கருத்துக்களிலிருந்து தற்போது முரண்பட்ட கருத்துக்களை அமெரிக்க அரசின் நிர்வாகிகள் தெரிவித்து வருவதாகவும், ஈராக்கின் ஆட்சி அதிகாரத்தை எதிர்வரும் யூன் மாதம் அந்த நாட்டினரிடம் வழங்கும்போது அமெரிக்காவிற்கு பாதிப்பு ஏற்படலாம் என கருதுவதாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தனர்.

பேராபத்தை விளைவிக்கக் கூடிய ஆயுதங்கள் ஈராக்கில் உள்ளன என்பதற்கான சான்றுகளைப் புலனய்வுத் துறையினர் சேகரித்திருந்தனர் எனவும், இதன் பின்னரே ஈராக்கின் மீது போர் தொடுக்கப்பட்டது எனவும் பத்திரிகை ஒன்று அளித்த பேட்டியில் பிளேயர் தெரிவித்தார்.

ஈராக்கில் அணு ஆயுதப் பரிசோதனையில் ஈடுபட்டிருந்த 'டேவிட்கே'யின் தற்கொலை தொடர்பான விசாரணையின் முடிவுகள் ரொனிபிளேயருக்கு சாதகமாக அமையாதுவிடின் அவர் பதவியிலிருந்து விலக வேண்டிவரும் என வாக்காளர்கள் கருதுகின்றனர்.

# ஊர்சுற்றி எழுதுவது

"அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் கொள்கை ரீதியில் இணக்கப்பாட்டுக்கு வந்து தேர்தலை எதிர்கொண்டால், இலங்கையின் அரசியல் தலைவிதியைத் தீர்மானிக்கும் பெரும் சக்தியாகப் பரிணமிக்க முடியும்" என்று மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், அமைச்சருமான பெ.சந்திரசேகரன் தெரிவித்திருக்கிறார்.

நாடாளுமன்றத்தைக் கலைத்து, விரைவல் புதிய நாடாளுமன்றத்துக்குப் பொதுத் தேர்தல் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படத் தொடங்கியிருப்பதை அடுத்து இப்போது தேர்தல் காற்றடிக்கத் தொடங்கியிருக்கிறது.

அதிகாரத்திலிருக்கும் சந்திரிகா அம்மையாரே கூடக்கூடாதவர்கள் என்று முன்னர் கருதப்பட்டவர்களோடு கூட்டணி அமைத்திருக்கிறார். மற்றும் பல அரசியற் கட்சிகளையும் சேர்த்து பெரிய கூட்டணியாக அதாவது, பல கட்சிகள் கொண்ட தேசிய முன்னணியை அமைத்து 'தேசிய அரசு' அமைக்கும் நோக்குடன் முயற்சி செய்யப்போகிறாராம்.

மலையக மக்கள் முன்னணித் தலைவரின் தமிழ்க்கட்சிகளின் ஒன்றிணைப்புத் திட்டம் இன்றைய சூழ்நிலையில் சிறந்த யோசனை மட்டுமல்ல, அவசியமானதும் தான்!

தேர்தல் காலம் வரும்போது தமிழ்க் கட்சிகளை ஒன்றிணைப்பது என்றும், ஐக்கியப்படுத்துவது என்றும் பேச்சுக்கள் கிளம்பும். சில தலைவர்கள் கூடிப்பேசிக் கைகளும் குலுக்கிக் கொள்வார்கள்.

ஆனால், தேர்தல் நெருங்கும் சமயத்தில் இந்தக் கூட்டும், ஐக்கியமும் உருப்படாமல் ஆளுக்கொரு திசையில் பிரிந்துவிடுவர். இது வழமை!.

இப்பொழுதே இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் எம்.எஸ்.செல்லச்சாமி, அனைத்துக் கட்சிகளின் ஒருங்கிணைப்பு யோசனை உருப்படக்கூடியதல்லவென்று தெரிவித்திருக்கிறார்.

ஜனநாயக முறையில் தமிழ்மக்களின் உரிமைகளை வாதாடிப்பெறுவதற்காக நாவல்லவர்களை நாடாளுமன்றத்துக்குத் தெரிவுசெய்த காலத்திலும் தமிழர்கள் ஒன்றுபட்டுத் தகுதியானவர்களைப் போட்டியின்றித் தெரிவுசெய்ய வேண்டுமென்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டது.

இது வெற்றிபெறவில்லை.

இதன்பின் வாதாடிப் பெறவேண்டியதைப் பெறுவதுடன், காந்திய வழியில் சாத்வீகப் போராட்டம் நடத்தி உரிமைகளைப் பெறுவதற்குத் தகுதியானவர்களை தமிழ்மக்கள் ஒன்றிணைந்து தெரிவுசெய்ய வேண்டுமென்ற கோரிக்கை எழுந்தது.

இதுவும் முழுவெற்றியடையவில்லை.

1977 ஆம் ஆண்டுப் பொதுத்தேர்தலில் தமிழ்மக்கள் 'இழந்த தமிழரசை மீள அமைப்பதற்காக' தமிழர் தாயகத்தில் பெரும்பான்மையானவர்களைத் தெரிவு செய்தாலும் வேறு ஒன்றிரெண்டு பேரும் தெரிவாகி 'இணைந்த மக்கள் தீர்ப்பு' என்று சொல்ல முடியாமல் போனது.

எப்படியானாலும், தமிழர் தாயக மக்கள் - இழந்த தமிழரசை மீட்பதற்கு வாக்களித்த போதிலும் பெரும்பான்மை ஜனநாயகம் தமிழர் தாயகத்தின் ஆணையை ஏற்றுக்கொள்ளவில்லை, மதிப்பளிக்கவுமில்லை.

இதே ஜனநாயக முறையில் பொதுத் தேர்தல் நடந்தாலும் எதுவும் நடைபெறப் போவதில்லை. அனைத்துத் தமிழ்க்கட்சிகளும் ஒன்றுபட்டுத் தேர்தலில் வெற்றியீட்டினால் உலகுக்கு தமிழர் ஒற்றுமையைப் பறைசாற்ற ஒரு வாய்ப்பு ஏற்படும். அத்துடன், ஒற்றையாட்சி அமைப்பைக் குப்பைக்குள் போடுங்கள் என்று குரல் கொடுக்கவும் வாய்ப்பேற்படலாம்.

ஒற்றையாட்சி அரசியலமைப்பு இருக்கும் வரை இந்த நாட்டில் தமிழ்மக்கள் எதையும் ஜனநாயக முறையில் பெறமுடியாது என்பது உறுதி!

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து திலங்க சுமதிபால நீக்கப்படுவார்!

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் தலைவர் பதவியிலிருந்து திலங்க சுமதிபாலவை நீக்குவதற்கு தொலைத்தொடர்பு அமைச்சு தீர்மானித்திருப்பதாகத் தெரியவருகிறது.

தொலைத் தொடர்பு அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜா இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

இதேவேளை - ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் தனது செயலாளர் டபிள்யூ.கே. எஸ்.கருணாரடண மூலமாக திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத்தையிடம், திலங்க சுமதிபாலவை ரெலிக்கொம் தலைவர் பதவியிலிருந்து நீக்க நடவடிக்கை எடுக்கும்படி பணித்திருந்தார்.

கடந்த 23 ஆம் திகதி எழுதப்பட்ட இந்தக் கடிதத்தில் திறைசேரி மூலமே திலங்க சுமதிபாலவை பதவியிலிருந்து நீக்கமுடியும் என்று குறிப்பிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பாதாள உலகத் தலைவராக இருந்து அண்மையில் சுட்டுக்கொல்லப்பட்ட தம்மிக்க அமரசிங்கவிற்கு, உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டியைப் பார்வையிட பயண ஒழுங்குகளை செய்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்ட திலங்க சுமதிபாலவை, விளக்கமறியலில் வைக்குமாறு கடந்த திங்கட்கிழமை கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டது.

இதையடுத்தே, திலங்க சுமதிபாலவை பதவிநீக்கம் செய்யும்படி ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு பிறப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முடிவு குறித்து கடந்த வாரம் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவுக்கும், ஜனாதிபதியின் செயலாளர் மனோ தித்தவெலவுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுக்களின்போது ஆராயப்பட்டது.

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த முடிவை மலிக் சமரவிக்கிரமவிற்கு அறிவித்தபோது, அதற்கு அவர், "மிகவும் நல்லது, சட்ட நடவடிக்கைகளுக்கு எதிராக நாம் ஒன்றும் செய்ய முடியாது" எனத் தெரிவித்தார்.

# இந்திய மீனவருக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்தத் திட்டம்!

யாழ். குருநகர் மற்றும் இரணைதீவுப் பகுதி மீனவர்கள் - மன்னார் பேசாலை மீனவர்களுடன் இணைந்து, இந்திய மீனவர்களின் செயற்பாட்டைக் கண்டித்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ்-மன்னார் கடற்பரப்பில் அதிகரித்திருக்கும் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களைக் கண்டித்தே இந்த ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறவுள்ளன.

இதற்கான உடன்பாட்டை குருநகர், இரணைதீவு, பேசாலைப் பகுதிகளைச் சேர்ந்த மீனவர் சங்கங்கள் இணைந்து மேற்கொண்டிருப்பதாகவும் இதன் அடிப்படையிலேயே இந்த எதிர்ப்புப் போராட்டங்கள் இடம்பெறவிருப்பதாகவும் தெரியவருகிறது. (201)

# இளைஞர் குழுக்கள் மோதல் பருத்தித்துறையில் பதற்றம்!

(பருத்தித்துறை)

இந்து கலாசார அமைச்சின் ஏற்பாட்டில் நடைபெற்ற கபடிப்போட்டியின் முடிவில் இளைஞர் குழுக்கள் மோதிக்கொண்டதில் சிலர் காயமடைந்ததுடன், பருத்தித்துறைப் பகுதியில் பெரும் பதற்றம் நிலவியது.

சுன்னாகம் பகுதியில் நேற்று கபடி விளையாடிவிட்டு ஊர் திரும்பிக் கொண்டிருந்த இரு குழுக்களுக்கிடையிலேயே இந்தக் களேபரம் இடம்பெற்றது.

இந்தச் சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, பருத்தித்துறை சுப்பர்மடப் பகுதி இளைஞர் கழகமொன்றும், முனைப்பகுதி இளைஞர் கழகமொன்றும் சுன்னாகத்தில் இந்துகலாசார அமைச்சின் ஏற்பாட்டில் இடம்பெற்ற கபடிச்சுற்றுப் போட்டியில் பங்குபற்றிவிட்டு திரும்பிக் கொண்டிருக்கையில் ஏற்பட்ட வாய்த்த தர்க்கத்தால் இரு குழுவினரும் அடிதடியில் இறங்கினர்.

தாம் பயணித்த இரு வாகனத்தையும் வீதியோரமாக நிறுத்திவிட்டு வல்லிபுரம் பகுதியில் இவர்கள் மோதலில் ஈடுபட்டனர்.

இதனால், அந்தப் பகுதியல் பெரும் பதற்றம் நிலவியுள்ளது. எனினும், கலாசாரம்பேணும் குழுவினரின் தலையீட்டை அடுத்து அந்தப்பகுதியில் அமைதி மீண்டதாகத் தெரியவருகிறது. (122)

## ரவி ஜெயவர்த்தன..

இவர் பொலிஸ் விசேட அதிரடிப் படையை உருவாக்கவதில் பெரும் பங்களிப்புச் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பி- சுதந்திரக்கட்சி உடன்பாட்டை அடுத்தே ஜனாதிபதி சந்திரிகாவின் உத்தரவின் பெயரில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது.

## குளத்தில்...

சென்றிருந்தனர். இவர்களில் இரு மாணவிகள் நிரில்மூழ்கி உயிரிழந்தனர். நிரில்மூழ்கிய இருவரையும் காப்பாற்ற முற்பட்டபோதும் முயற்சி பயனளிக்வில்லை.

இறந்த இருவரின் சடலங்களும் வவுனியா வைத்தியசாலைக்கு எடுத்துவரப்பட்டு விசாரணையின் பின் உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

## புலிகளுடன்...

விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படும் சூழல் உருவானால் அது பகிரங்கமாகவே இடம்பெறும். அத்துடன் மக்களுக்குத் தெரியாமல் விடுதலைப் புலிகளுடன் எந்தவொரு பேச்சுவார்த்தையோ, கொடுக்கல் வாங்கலோ இடம்பெறாது என்பதை ஜனாதிபதி சந்திரிகா மக்களுக்கு அறிவிக்க விரும்புகிறார் எனவும் -

ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜனதாச பீரிஸ் வெளியிட்ட அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது.

## கடற்படை...

பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த கணவன், மனைவி மற்றும் அவர்களது இரு பிள்ளைகளும் உயிரிழந்தனர்.

இச் சம்பவத்தில் காயமடைந்த மேலுமொருவர் நீர்கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

## தமிழீழ...

இந்த நிகழ்வில் தமிழீழ அரசியற்துறை பொறுப்பாளர் சு.ப். தமிழ்ச்செல்வன் நீதி நிர்வாகப் பொறுப்பாளர் பரா ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இந்த நிகழ்வில் நீதியாளர்கள், சட்டவாளர்கள், பொறுப்பாளர்கள், போராளிகள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

## நெல்லியடியில் நேற்றும்...

இராசதுரை தர்வினா (வயது 8) ஆகிய மூவருமே படுகாயமடைந்தவர்களாவர்.

எதிர்எதிரே வந்த மோட்டார்சைக்கிளும் காரும் மோதியதிலே இந்த மூவரும் காயமடைந்தனர். மோட்டார் சைக்கிள் மீது கார்ச்சில்லு ஏறியதில் இவர்கள் காயமடைந்ததாக தெரிவிக்கப்பட்டது. தலையிலும் கால் பகுதியிலும் பலத்த காயமடைந்த வேலும் மயிலும் பகவதி யாழ் .போதன வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஏனைய இருவரும் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டதுடன் விபத்துக்குள்ளான கார். மோட்டார் சைக்கில் என்பவற்றை எடுத்துச் சென்றனர். (122, 13,202)

## சிரேஷ்ட இராணுவ அதிகாரிகள்...

கொள்ளப்பட்ட அதிகாரிகளில் மேஜர் ஜெனரல ஐவன் திஸநாயக்காவும் ஒருவராவார். இவர் இராணுவத்தின் ஆயுத தளபாடங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாக, அத்துருகிரியவில் தேடுதல் நடத்தப்பட்டபோது பதவிவகித்திருந்தார்.

இவரை எதிர்வரும் மார்ச் 31 ஆம் திகதியுடன் பதவியிலிருந்த ஓய்வு பெற்றுச் செல்லுமாறு இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல கேட்டுள்ளார். ஓய்வு பெறவேண்டிய காலத்துக்கு மூன்று மாதங்களுக்கு முன்னதாகவே இவரை ஓய்வு பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது.

அத்துடன் இராணுவப் புலனாய்வுப் பிரிவின் கட்டளை அதிகாரியாக முன்னர் பதவிவகித்த கேணல் பராக்கிரம திஸநாயக்காவையும், யாழ் குடாநாட்டில் இராணுவப் புலனாய்வு நடவடிக்கைகளுக்கு பொறுப்பாளராக இருந்த மேஜர் ரஜித் கருணாரட்ண ஆகியோர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்து இராணுவத்தைவிட்டு வெளியேற்றும் முடிவு எடுக்கப்பட்டிருப்பதாக பாதுகாப்பு அமைச்சு பேச்சாளர் தெரிவித்தார்.

அத்துருகிரிய ஆயுதத் தளபாட மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலுடன் இவர்களுக்கு தொடர்பிருந்ததாக, ஜனாதிபதி விசாரணைக் குழு தனது அறிக்கையில் தெரிவித்திருந்த சிபாரிசின் அடிப்படையிலேயே, இவர்கள் மீதான ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பான தகவல்களை இராணுவ நீதிமன்றுக்கு வழங்கி ஒத்துழைக்காத இன்னொரு சிரேஷ்ட இராணுவ அதிகாரி எச்சரிக்கப்பட்டிருக்கிறார்.

அத்துருகிரிய தேடுதல் தொடர்பாக நடத்தப்பட்ட இராணுவ நீதிமன்ற விசாரணையின்போது கேணல் பத்மசிறி உடுகம்பொல போதிய தகவல்களை அளிக்க முன்வராததாலேயே இராணுவத் தளபதியால் இவர் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்.

அத்துடன் இவருக்கு எதிர்காலத்தில் கிடைக்கக்கூடிய பதவியுயர்வு மற்றும் சேவை நீடிப்பு என்பனவும் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

இவர் இராணுவ மறைவிடத்தில் தேடுதல் நடத்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் குலசிறி உடுகம்பொலவின சகோதரர் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் ஜனாதிபதி விசாரணைக் குழுவின் சிபாரிசின் அடிப்படையில் - அத்துருகிரிய மறைவிடம் பற்றிய தகவல்களை சேகரித்திருந்த கோப்ரல் அனுரா பீரிஸையும் சேவையிருந்து நீக்க இராணுவத் தளபதி நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதேவேளை, இந்த மறைவிடத்தை சோதனையிட்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம் பொல மீது பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்கலாம் எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரசியல் நெருக்கடிக்கு....

ஆம் திகதிக்கு முன்னர் அரசியலில் ஓர் உடன்பாடு ஏற்படவேண்டும்.

அவ்வாறு உடன்பாடு ஏற்படாவிட்டால் ரோக்கியோ உதவி வழங்கும் மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட நிதி கிடைக்காமல் போகும்.

போர்நிறுத்த உடன்படிக்கையை உறுதியாகக் கடைப்பிடித்து நடப்பதன் மூலமே அரசியல் ரீதியிலான பிரச்சினைகளைத் தடுக்க முடியும்.

தென்னிலங்கையில் உருவாகியுள்ள அரசியல் நெருக்கடிகளைத் தீர்ப்பதற்கு அரசியல் கட்சிகள் மத்தியில் இணக்கப்பாடு தேவை. தமிழீழ விடுதலைப் புலிகள் தாம் சமாதானப் பேச்சில் தொடர்ந்து உறுதியாக இருப்பதாகவும் அதற்கு அரசும், சர்வதேசமுமே உதவ வேண்டுமெனத் தெரிவித்திருக்கின்றனர்.

இந்த நிலையில் தென்னிலங்கை அரசியலில் ஏற்பட்டிருக்கம் பிரச்சினைகள் தீர்க்கப்படாதுவிட்டால், அது எமக்குப் பாதகமாகவே அமைந்துவிடும் எனவும் பிரதமர் தெரிவித்தார்.

## தென்னிலங்கை...

பிரதமரும் விரைவில் உடன்பாடு ஒன்றிற்கு வருதல் வேண்டும்.

புரிந்துணர்வின் அடிப்படையிலான இணக்கப்பாட்டுக்கு வருவதன் ஊடாகவே இலங்கையின் சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்.

ரோக்கியோ மாநாட்டின் இரண்டாவது அவதான மாநாட்டில் பங்குபற்றிய வெளிநாட்டு பிரதிநிதிகள் இதனை வலியுறுத்தியுள்ளனர்.

ரோக்கியோ மாநாட்டில் உறுதியளிக்கப்பட்ட முழுத்தொகையும் கிடைக்க வேண்டுமானால் அரசியல் ஸ்திரநிலை ஒன்று உண்டாக வேண்டியது அவசியம்.

தமிழீழ விடுதலைப்புலிகள் சமாதானத்தை விரும்புகிறார்கள். அதனை எதிர்பார்த்த வண்ணம் இருக்கும் அவர்களை ஏமாற்றுவது போல் தென்னிலங்கையில் அரசியல் இழுபறி தொடர்வது இலங்கைக்கு பாதகமாகவே அமையும்.

தமிழீழ விடுதலைப் புலிகளை பொறுத்தவரையில் சிறுவர்களை படையில் சேர்க்கும் விடயத்தில் அவர்கள் மிகவும் கவனமாக செயற்பட வேண்டும். அது அவர்களுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் ஓர் நிகழ்வாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (01)

# மரண அறிவித்தல்

## Dr. திருமதி சறோஜினி சுப்பிரமணியம்

### (நவாலி வடக்கு)

ஓய்வுபெற்ற வைத்திய அதிகாரி (RMO), Dr.திருமதி சறோஜினிதேவி சுப்பிரமணியம் அவர்கள் நேற்று 25.01.2004 அன்று காலமானார். அன்னார் மானிப்பாய் மகளிர் கல்லூரியின் ஓய்வுபெற்ற ஆசிரியர் த.சுப்பிரமணியம் அவர்களின் அன்பு மனைவியும், ஐங்கரன் (கணனி விரிவுரையாளர், IIS) செல்வி சுபாஷினி (ஆசிரிய பயிலுநர், 2 ஆம் அணி, யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற அதிபர் சி.கதிரவேலு, இரத்தினம் தம்பதியினரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிஐயா தம்பதிகளின் அன்பு மருமகளும், ஸ்ரீகாந்தன் (கனடா), கௌரிகாந்தன், செல்வி சந்திரகுமாரி (ஆசிரியை, நவாலி மகாவித்தியாலயம்), ஜெயகாந்தன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26.01.2004 திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக வழுக்கையாற்றங்கரையில் அமைந்துள்ள ஆரியப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நவாலி வடக்கு,
மானிப்பாய். (605)

தகவல்:
த.சுப்பிரமணியம்
(கணவர்)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 26.01.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.